தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலே இரண்டணு. | வெளி நாடு: மூன்றணு. | அலுவலகம்: 'தென்றல்' சென்னே-6.

மலர் 1 | சென்னே | 12—3—1955 | சனிக்கிழமை | இதழ் 37

நாவல்ல பாரதியார் நீடு வாழ்க !

அண்ணுமலே சர்வகலாசாலே பட்டமளிப்பு மண்டபத்தில், (28-2-55) திங்கட் கிழமை மாலே டாக்டர் சோமசுந்தர பாரதியாருக்கு செட்டிநாட்டு அரசர் முத்தையா செட்டியார் பொன்ஞடை போர்த்திஞர். தன்னேப் பாராட்டியவர்களுக்கு பாரதியார் நன்றி கூறுகையில் தெரிவித்ததாவது :—

அரசர் அவர்களே, அறிஞர்களே, நண்பர்களே,

தமிழ்நாட்டி லுள்ள தமிழ்ப் பல்கலேக்கழக வெள்ளிவிழாவில் பல அறிஞர்கள் முன்னிலேயில் எனக்கு டாக்டர் பட்டம் வழங்கும்படி செய்தீர்கள். நான் செய்த தமிழ்த் தொண்டுக்கு அறிகுறியாக டாக்டர் பட்டம் பெற்றேன். நான் டாக்டர் பட்டம் பெற்றது போதாதென்று தனியான ஒரு பாராட்டு விழாவும் ஏற்பாடு செய்தீர்கள். ஆனுல் இங்கு நடைபெற்ற பாராட்டு விழா எனக்கு அல்ல. நிச்சயமாகத் தமிழுக்கு உண்டான பாராட்டு என்றே நான் சொல்லுவேன். தமிழர்கள் அனேவரும் இதை நன்கு அறிவார்கள். இன்று நீங்கள் காட்டிய எந்தச் சிறப்பும் எனக்கு உரியதல்ல. தமிழினிடத்தில் யான் அன்போடு தொண்டு செய்ததற்காக இன்றைய விழா ஏற்பாடு செய்யப் பெற்றிருக்கிறது. தமிழுக்கு உண்மையான தொண்டு செய்கின்றவர்களேப் பாராட்டுகின்ற காலம் வந்துவிட்டது. காலம் அதிகமாகிவிட்டதால் நீண்ட நேரம் நான் பேசத்துணிய மாட்டேன். இரண்டொரு செய்தியைத் தமிழறிஞர்களுக்கும் தமிழ்ப் பெருமக்களுக்கும் இந்த இடத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடமையில் கருத்துடைய நான் இதை உணருகிறேன். தமிழ்நாட்டிலே தமிழிலே ஆட்சி மொழி இருக்கவேண்டும் என்று சொல்ல வேண்டிய அவசியம் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

இதுவரை அரசாங்கத்திலே எந்தக் காரியமும் தமிழிலே நடைபெறவில்லே. இனி தமிழ்நாட்டிலே எந்தக் காரியமும் தமிழிலே நடைபெற வேண்டும். தமிழ்நாடெங்கும் பள்ளிகளிலே தமிழ் கட்டாய பாடமாக இருக்கவேண்டும். அடுத்து வரும் தேர்தல்களிலே தமிழ் தெரியாதாரை சட்டசபைக்கு அனுப்பமாட்டோம். தமிழுக்குத் தொல்லே தருவோரை விரைவிலே தள்ளுவோம். இந்த உறுதிமொழியை வாய்ச்சொல் அளவிலே இல்லாமல் செயலளவிலே கொண்டு வருவோமாக. இதற்காகப் போர் ஏற்பட்டால் அந்தப் போரிலே நாம் வெற்றி பெறுவோமாக.

மற்றென்று, நாம் வெகு விரைவாகச் செய்துமுடிக்க வேண்டிய ஒன்று. என்ன வென்ருல்,

வெள்ளி முளைத்துவிட்டது மட்டுமல்ல. ஞாயிறுகூடக் கிளம்ப ஆரம்பித்து விட்டது. வெகு விரைவிலே தமிழ் ஆட்சி மொழியாகும். தமிழர்கள் உயரவேண்டும். அதற்கு வேண்டிய அத்தனேயும் செய்ய முயலுவோம். பொறுக்கியெடுத்த சிறந்த அறிஞர்களேக் கொண்டு ஒரு மன்றம் அல்லது ஒரு கழகம் ஏற்படுத்துவோம். அந்தக் கழகத்திலே என்னென்ன துறையிலே தமிழ் வளர்க்கலாமோ அதையெல்லாம் செய்ய முயலுவோம். இதைப் பற்றி வெகுவிரைவிலே ஆராய்ந்து நல்ல செயலேக் கையாண்டு பயன் பெறுவோமாக.

அறிவுத்துறையிலே தமிழ்த் தொண்டு செய்கின்றவர்களேயே நாங்கள் பாராட்டுவோம். இனிமேல் நாங்கள் உறங்கமாட்டோம். தமிழர்கள் விழித்தெழுந்து கடமையைச் செய்வார்கள் என்று நம்புவோம். நான் செய்த தமிழ்த் தொண்டை நீங்கள் பாராட்டியது கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். என்னே இங்கு அழைத்துச் சிறப்பித்ததற்காகச் செட்டிநாட்டு அரசர்க்கும் மற்றவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கு கூடியுள்ள அனேவரும் தமிழ்த்தொண்டு செய்ய முயல்வோம். இங்கு கூடியுள்ள தமிழன்பர்களுக்கும் தமிழ்க் கவிஞர்களுக்கும் என்னுடைய மகிழ்ச்சியும் நன்றியும் உரியதாகுக.

★

கவிஞர் பாரதிதாசன்
பேருரை

டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்களே,
தோழர்களே, தோழியர்களே!

இதுவரைக்கும் அறிஞர் பலர் பாராட்டுக்களேக் கேட்டு மகிழ்ந்தோம். அறிஞர்கள் பலர் சொல்லுவதைச் சுருக்கி நாம் பார்த்தால், நமக்கு ஒரு முடிவு ஏற்படுகிறது. இந்த நாட்டிலே தமிழ் வளர்ச்சி அடைகிறது. பின்னர் வெறுப்பு கூட உண்டு பண்ணுகிறது. தமிழ் நாட்டிலே தமிழர்களின் தாய் மொழியாகிய தமிழை அதிகம் படிக்காதவர்கள் தமிழ் நாட்டிலே அதிகமாக இருக்கிருர்கள். தமிழரின் முன்னேற்றம் தடைப்பட வேண்டுமென்று பலர் நினைக்கிருர்கள். தமிழைக்கண்டு வெறுப்படைபவர்களுக்கும் தமிழின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பவர்களுக்கும் பாரதியார் முன்னிலேயில் இறுதி எச்சரிக்கை விடுகிறேன். நாங்கள் எல்லோரும் விழிப்புடன் இருக்கிருேம் என்பதைப் பலரும் உணருவார்களாக. தமிழுக்கு நல்லெண்ணத்தோடு தொண்டு செய்கிறவர்களே இந்நாளிலே மக்கள் பாராட்டுகிருர்கள். தமிழுக்குத் தொண்டு செய்ததால் எவ்வளவு புகழ் பாரதியாருக்குக் கிடைத்தது என்பதை நன்கு அறிகிருேம். ஒரு காலத்திலேபாரதியார் பெரியவழக்கறிஞராக இருந்தார். அப்போது கூட அவரை, "ஒரு பெரிய வழக்கறிஞர்என்று பலர்சொல்லியதில்லே ஒரு பெரிய தமிழறிஞர் என்றே சொல்லுவார்கள். 25 ஆண்டுகளுக்கு முன்பே அண்ணுமலே அரசர் பெருநிதி வைத்துக் கொண்டிருந்தார். இந்தப் பெரு நிதி வைத்துக் கொண்டு தாம் என்ன செய்வது என்று தன்னேயே தான் கேட்டுக் கொண்டார். தமிழரின் முன்னேற்றத்திற்காகப் பெரிய பல்கலேக் கழகத்தைத் தோற்றுவித்தால், நல்ல வகையிலே இந்தப் பல்கலேக் கழகம் நடந்து வரும் என்று எண்ணி பல்கலேக் கழகத்தை தோற்றுவித்தார்.

தமிழ்த் தொண்டு மனமாரச் செய்கின்றவர்களே இனி யாரும் எதிர்க்கக்கூடாது. தமிழ் நாட்டிலே ஒவ்வொருவரும் தமிழிலே பேசவேண்டும்; எழுத வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரதியார் தமிழுக்காகப் பா[illegible] பட்டார் என்று சொல்லுகிருர்கள். இதில் என்ன வியப்பு ? இயல்பாக அவரது கடமையைத்தானே செய்கிருர். ஆங்கிலேயர் ஒருவர் ஆங்கில மொழிக்காகப் பாடுபடுவதை ஆங்கிலேயர் பாராட்டுவார்களா ? அல்லது பிரெஞ்சு மொழிக்கு ஒரு பிரெஞ்சுக்காரர் பணியாற்றுவதை மற்ற பிரெஞ்சுக்காரர்கள்போற்றிப் புகழ்வார்களா ? தமிழ் நாட்டில் மட்டும் என் இந்த நிலே. ? தமி[illegible] யும் தமிழர்களேயும் ஒழித்[illegible] தான் நாம் வாழ முடியு[illegible]

(5-ம் பக்கம் பார்[illegible]

ஆந்திரத்தில் நடைபெற்ற மறு தேர்தலின் முடிவுகள் பெரும்பாலும் அறிவிக்கப்பட்டு விட்டன. சென்ற தடவை வென்றதைக் காட்டிலும் அதிகப்படியான தொகுதிகளில் காங்கிரஸ் வென்றுள்ளதை, மறு தேர்தல் முடிவுகள் நமக்குக் கூறுகின்றன. எதிர்க் கட்சிகள், இந்த வெற்றியின் அடிப்படையைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். சுதந்தரம் வந்த நேரத்தில் காங்கிரஸ் எவ்வளவு பலம் பொருந்தி, வெற்றிபெற்றதோ, அதே அளவு வெற்றியை இப்போது பெற்றிருக்கிறது. நாட்டு நடப்பில், மக்களின் வாழ்க்கைத்தரம் இம்மியும் உயராத நிலையில், தொல்லைகளே மிகுந்துள்ள சூழ்நிலையில், மனக்கசப்பே அதிகரித்துள்ள நேரத்தில், இவற்றிற்கு முழுக்க முழுக்கக் காரணமான ஒரு கட்சி புதுபலம் பெறுவதென்றால், இதை எதிர்க்கட்சிகள் மேலோட்டமாக விட்டுவிட முடியாது. சென்ற தேர்தல் சமயத்தில் நாட்டில் இருந்த வாழ்க்கைத் தரத்தைக் காட்டிலும் இப்போதைய நிலை உயர்ந்ததாக இல்லை ஆனாலும் காங்கிரஸ், ஆந்திரத்தில் வெற்றிமுரசு கொட்டுகிறது! ஏன்? எப்படி? என்ன நடந்து விட்டது, உன்னதச்செயல் இப்போது? ஆராய்வோம்.

இந்த வெற்றிக்கு அடிப்படையாக ஐந்து காரணங்களை நாம் கண்டு பிடிக்கலாம்.

1. ஆவடியில் கூடிய காங்கிரசின் விளம்பர பலம்.
2. நேருவின் "சோஷலிச மாதிரி" கோஷம்.
3. கம்யூனிஸ்டுகளுக்கு எதிர் செயலாக உருக்கொண்ட, மாலங்கோவ் வீழ்ச்சி.
4. அதிகார பலத்தோடு காங்கிரஸ் கையாண்ட தில்லு முல்லுகள்
5. காங்கிரஸ் ஏற்படுத்திய ஐக்கிய முன்னணி.

இந்த ஐந்துந்தான், ஆந்திரத்தில் காங்கிரஸ் வெல்லவும், கம்யூனிஸ்டுகள் தோல்வியடையவும் காரணங்களாகும். இன்று சில தொகுதிகளில் மிகப் பிரபலமான கம்யூனிஸ்டுகள் தோற்றும், ஊர் பேர் தெரியாமல் காங்கிரஸ் 'லேபிள்' ஒட்டப் பட்டோர்வென்றும் உள்ளனர். சென்ற தேர்தலில் மந்திரிகளையே கம்யூனிஸ்டுகள் மண்கவ்வச் செய்தனர் என்பதையும் எண்ணிப்பார்த்தால் ஆச்சரியமே மேலிடுகிறது

ஆவடியில் கூடிய காங்கிரஸ், வேடிக்கை பார்க்க வந்த மக்களையும் சேர்த்து காங்கிரஸின் பலமாகக் காட்டிற்று. பாமரமக்கள் [illegible]தை நம்பவும் முடிந்தது. "என்ன [illegible]ந்தாலும் நேருஜி நேருஜி [illegible]!" என்று சொல்லவைத்தது. [illegible]க்கப்பணத்தைச் செலவிட்டு, [illegible]ட்டிய ஆடம்பர சோடனைகளைத்தவிர உருப்படியான செயலொன்றும் ஆற்றாத ஆவடி காங்கிரஸ், நாட்டுப்புற மக்களைக் கவர்ந்ததை மறுக்கமுடியாது. பத்திரிகை பலத்தைக்கொண்டு, முதலாளித்துவமும், ஆரியமும் அதற்குத் தங்களாலான முழுவிளம்பரத்தையும் கொடுத்தன; அதைத் தங்களின் 'வாழ்க்கை வெளிச்சமாக' பாமரரைக் கருதவைத்தன! கட்சிக்குள்ளிருக்கும் ஊழல்களைக் கண்டிப்பவர்களாக, தங்களைச் சில காங்கிரஸ் தலைவர்கள் காட்டிக் கொண்டனர். "உண்மையில் காங்கிரஸ், ஊழல்களை விரும்பவில்லை. நேருஜி கண்டிக்கிறார்!" என ஏதுமறியாத பாமரமக்கள் நம்பினர். இது காங்கிரஸின் வெற்றிக்கு ஒரு காரணம்.

பண்டிதர், அந்த மாநாட்டில், காங்கிரஸின் எதிர்கால வேலைத்திட்டமாக, 'சோஷலிச மாதிரி'யை வைத்தார். அதே தனது மூச்சு என்றார், நாற்பதாண்டாகத் தான் கருதியது அதுவே என்றார். இதுவும் பாமரமக்களை அதிகமாகக் கவர்ந்தது. இந்த கோஷத்தை ஆவடியில் பெற்றெடுத்து, சில காங்கிரஸ் தலைவர்கள். ஆந்திரத்தில் கொண்டுபோய், தேர்தல் தொட்டிலில் போட்டுத் தாலாட்டினார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாதாரவாதம், சோஷலிஸ்ட் கட்சியின் - அதே தன்மைய - கோஷம் இவற்றை. நேருவின் 'சோஷலிச பாணி' அறிவிப்பு ஓரளவுக்கு பலவீனப்படுத்தி விட்டது. எதிர்க் கட்சிக்காரனின் சோஷலிசத்தைக் காட்டிலும் அதிகாரக் கட்சிக்காரரின் சோஷலிசப்பேச்சு பாமரர்களைக் கவர்வது இயற்கை. செயல்படுத்துவதில் இவர்களுக்கு வசதிகள் அதிகம் என்பது அதன் காரணமாகும். தொல்லைகளை அனுபவிக்காமலே சோஷலிச லட்சியத்தை அடைந்து விடலாம் என்ற தப்புக் கணக்கினால் சுலபமாக பாமரர்கள் சிக்கிக்கொண்டார்கள். இதுவும் காங்கிரஸின் வெற்றிக்கு ஒரு காரணமாகும்.

பாமரர்களை நேருவின் 'சோஷலிசபாணி' அறிவிப்பு கவர்ந்து, கம்யூனிஸ்ட் - சோஷலிஸ்ட் கட்சிகளிடமிருந்து அவர்களை ஓரளவுக்குப் பிரிக்க உதவிய நேரத்தில், திடீரென்று "ரஷ்யாவில் மாலங்கோவ் "ராஜினமா" செய்தார்" என்கிற செய்தி வந்தது. இந்தச் செய்தி, பாமரர்களைக் குழப்பும் சக்திகொண்டதல்ல; இதன் அடிப்படையோ, ரகசியமோ அவர்களுக்கு - எடுத்துச் சொன்னாலும் புரியாது. "ராஜினமா" பற்றி விதவிதமாக வர்ணித்த முதலாளித்துவ ஏடுகளை பாமரர்கள் படித்திருக்கமுடியாது. ரஷ்யாவின் பழைய அரசியல் நடவடிக்கைகளின் அடிப்படையிலும் அவர்களுக்கு ஈடுபாடு இல்லை. ஆகவே இது பாமரர்கள் பக்கம் எந்தவிதமான பரபரப்பையும் ஊட்டவில்லை. ஆனால் அதே நேரத்தில் படித்தவர்களை இந்தச் செய்தி குழப்பிவிட்டது. ரஷ்யாவின் 'புனிதத்தன்மை'யில் அவர்களுக்கு நம்பிக்கைபோய் விட்டது,

ஸ்டாலின்-ட்ராட்ஸ்கி
மாலங்கோவ்- பெரியா
புல்கானின்-மாலங்கோவ்

என்று கணக்குப்போட வைத்தது. முதல் இரண்டு அரசியல் 'விளையாட்டுக்க'ளிலும் ட்ராட்ஸ்கியும் பெரியாவும் கொல்லப்பட்டதுசரிதான் எனவும், அவர்கள் துரோகிகள் எனவும் உண்மையிலேயே கருதிக் கொண்டிருந்த படித்தவர்களை இந்த மூன்றாவது 'தகராறு' குழம்பவைத்தது. "மாலங்கோவ் உயிருக்கு ஏதாவது நேருமோ!" என்று எண்ணச் செய்தது. ரஷ்யாவில் அரசியல் சூதாட்டம் நடக்கிறது என்ற "முதலாளித்துவப் பிரச்சார"த்தில் ஓரளவுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

அங்கிருந்துவரும் செய்திக்குத் தோதாக, தங்கள் பிரச்சாரத்தை வளைத்துக் கொள்ளும், இங்குள்ள கம்யூனிஸ்ட்களிடம் அவர்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது. இப்படி படித்தவர்கள் மனதில் ஏற்பட்ட அவநம்பிக்கை, நேருவின் 'சோஷலிசபாணி' மீது நம்பிக்கையாக மாறியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதுவும் காங்கிரஸின் வெற்றிக்கு ஒரு காரணமாகும் என நம்புவதில் தவறில்லை.

அடுத்து, தேர்தல் களங்களிலே காங்கிரஸ், அதிகாரிகளின் உதவி கொண்டு நடத்திய தில்லுமுல்லுகளைச் சொல்லலாம். அதைக் கொண்டு ஓட்டு திருட்டு சுலபமாக நடந்திருக்கிறதுஎனவும்யூகிக்கலாம் மற்றும் கம்யூனிஸ்ட்களையும் ஆள் பலமில்லாத சுயேச்சைகளையும் தனியாக விட்டுவிட்டு காங்கிரஸ், பிரஜா கட்சி கி. லோக் கட்சி முதலிய வற்றோடு ஏற்படுத்திய ஐக்கிய முன்னணியையும் காங்கிரஸின் வெற்றிக்குக் காரணமாகக் குறிப்பிடலாம்.

இப்படி, காங்கிரஸின் வெளிச்சமும். கம்யூனிஸ்ட்களின் இருட்டும் காங்கிரஸ் அமோக வெற்றிபெறக் காரணமாகிவிட்டன. இது தமிழ் நாட்டு அரசியலுக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு கட்சியும் தன் அடிப்படைக் கொள்கைகளை வலியுறுத்த வேண்டும். அதன் நன்மைகளை, பொருத்த அளவில் எடுத்துச் சொல்லவேண்டும். அசல் குதிரைகளைக் காட்டிலும் சிலைக்குதிரைகள் அழகாக இருப்பது வழக்கம். அசல்குதிரைகள் தூங்கவும் ஆரம்பித்துவிட்டால் சிலைக்குதிரைகளே சிறந்த குதிரைகள் என்று ஆகிவிடுவது இயற்கை. எதிர்க்கட்சிகள் தூங்கக் கூடாது; கைசோர்ந்துவிடக்கூடாது; 'நல்லவ'ரை எண்ணி நடை தளர்ந்து போகவும் கூடாது. அப்படி நடை தளர்ந்தால், அடுத்துவரும் தேர்தல், அனைத்திந்திய உபகண்டத்திலும் காங்கிரசை அசைப்பதற்கு ஆளில்லை என்கிற முடிவைத்தான் கூறும். முதலாளித்துவ, வகுப்புவாத வெறியர்களை அடுத்த தேர்தல் சட்டசபைக்குள் கொண்டுவந்து தள்ளித்தான் விடும்.

★

இந்த நேரத்தில், பண்டிதரின் 'சோஷலிச பாணி'யையும் ஆராய்ந்து பார்க்கலாம். அது 'சோஷலிச'மல்ல! சோஷலிச மாதிரி! அதாவது, குதிரையல்ல; குதிரைமாதிரி! உணவல்ல; உணவு மாதிரி! தண்ணீரல்ல; தண்ணீர் மாதிரி! இந்த 'சோஷலிச மாதிரி'யை நிறைவேற்ற பண்டிதர் யாருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் தெரியுமா? பெரிய தொழிலதிபர்களுக்கு! பண முதலைகளுக்கு! எப்படி! விட்டுக்கொடுங்கள் என்றா? இல்லை, சுரண்டித் தின்னுங்கள் என்கிற 'மாதிரி'!

மந்திகளைச் சேர்த்து மலர்த் தோட்டம்-இல்லை, 'மாதிரி'-போடப் போகிறார் பண்டிதர். ஏழை மக்களே! வாயைத் திறந்தபடி இருங்கள், வந்து விழப்போகிறது உணவு! டாட்டா, பிர்லா, டால்மியா, பஜாஜ், கோயங்கா கம்பெனிகளெல்லாம் சோஷலிசத்தை - இல்லை: 'மாதிரி'யை-நிறைவேற்றப்போகின்றனவாம்! இதை, விடாமல் தமுக்கடிக்கின்றனவே சில முதலாளித்துவ ஏடுகள்; அந்த வெட்கக்கேட்டையாரிடம்சொல்வது!

★

சமீபத்தில், நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களை அண்ணாமலை நகரில் அறிஞர்கள் கூடி கௌரவித்தனர் தகுதியுள்ளவர்; தன்னையறிந்தவர்; தமிழை வளர்த்தவர்; உறுதி நிறைந்தவர். அவரை கௌரவித்தவர்கள் தமிழை-தமிழ்நாட்டை-கௌரவித்தார்கள் என்று பொருள். வாழ்க நாவலர்! வாழ்க நீடுழி!

◉



நேருவின் 'சோஷலிச மாதிரி' நிஜக்கன்றுக்குட்டியல்ல, வைக்கோல் கன்றுக்குட்டி அதாவது கன்றுக்குட்டி மாதிரி.

[வாசகர்துதி(விநாயகர்துதிஎன்பதுபோல) எல்லாம் வல்ல 'தென்றல்' வாசகர்களுக்கு! இந்தக் கதையை படிக்கும்போதே இவர்களை எங்கோ சந்தித்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டால் அதற்கு நான் பொறுப்பல்ல என்பதையும், கதையை படித்த பிறகு, இதிலுள்ள 'கவுதமனை' 'கௌதமன்' என்றும், 'அகல்யா'வை அகல்யா என்றும் 'இந்திரனை' 'இந்திரன்' என்றும். யாராவது எழுத முற்பட்டால் அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் நிச்சயமாய் எடுத்துக்கொள்ளமாட்டேன், என்பதையும். கதையின் முடிவு 'எதிர்பாராத' தாய் இருந்தால் அது என் தப்பல்ல என்பதையும் தங்கள் திவ்ய சமூகத்திற்கு விண்ணப்பிக்கிறேன்.]

வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. இன்னும் சற்றுநேரத்தில் பெய்யவிருக்கும் பெருமழைக்கு 'கட்டியங் கூறுவதே, போன்று இடியொலிகள் சாதுகள் செவிடுபட முழங்கின. கண்களைப் பறிக்கும் மின்னலும், 'ஊய்,ஊய்' என்ற பேரிரைச்சலுடன் சுழன்றடித்த பேய்க்காற்றும், அந்த இரவுக்கு நேர இருக்கிற பயங்கரத்தைத் தெளிவுபடுத்துவனபோலிருந்தன. மாலை வரையில், கதிரவன் மலைவாயிலில் விழும்வரையில் வெளுத்தவானமாய், அமைதியாய் இருந்த அந்த வானத்தில்தான் அதற்குள் எவ்வளவு மாறுதல்கள் !

ஆமாம்! மாலைவரையில், 'அவர்' வீட்டில இருந்த வரையில், அவன் மனங்கூட அந்த வானத்தைப் போல சலனமற்றுத்தானிருந்தது. ஆனால், 'அவர்' ஸ்டுடியோவுக்குப் போன பிறகு? அவள்தான்-அந்த 'அவர்' கௌதமரின் மனைவி அகல்யா அழ ஆரம்பித்துவிட்டாள்! அவள் அழுதாள் ! விம்மி விம்மி அழுதாள் ! கேவிக்கேவி அழுதாள்! கண்களிலே நீர்வற்றும் வரையில் அழுதாள் ! அகல்யா. அழுவானேன் ! லட்சாதிபதி கௌதமரின் மனைவி அழுதாளா ? ஏன்? அவளை விட்டுவிட்டு 'அவர்' மட்டும் 'ஸ்டுடியோ'வுக்குச் சென்றுவிட்டாரே அதனாலா? அவர் வீட்டில் இருந்தாலும், ஸ்டுடியோவுக்குச் சென்றிருந்தாலும் அவளைப் பொறுத்தவரையில் அவளுக்கு எல்லாமே ஒன்றுதான். அப்படியானால்...... அவள் விருப்பத்தை நிறைவேற்ற அவர் தவறியிருப்பாரோ? அவரா அப்படிப்பட்டவர்! அவர் அந்த சந்தேகத்திற்கு இடமே வைக்கவில்லை! அவள் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள்; வானொலிப்பெட்டியிலே மூன்று! 'வண்ணான் வந்தானே' யிலிருந்து 'கல்யாணம் ஆகுமுன்னே கையைத் தொடலாகுமா' வரையிலுள்ள இசைத்தட்டுகளோடு கூடிய நவீன கிராமபோன் பெட்டி! நிலைக் கண்ணாடிகள்! நேர்த்தியான நாற்காலிகள், சோபாக்கள்! கால்கள் நோகாமலிருக்க கீழே விரிக்கப்பட்டிருந்த காஷ்மீர் தேசத்துக் கண்கவர் கம்பளங்கள்! இப்படித் தன் வீட்டையும் ஒரு சின்ன 'ஹாலிவுட்' டாக்கி வைத்திருந்தார்! யாருக்காக? எல்லாம் அவளுக்காகத்தான்! புடவைகள் தேவையா? அதோ அந்த பர்மாதேசத்துத் தேக்கமர பீரோவைத் திறந்து பாருங்கள்! அதிலே ஒரு 'கிசின் சந்த் செல்லாராம்' கடையே அடங்கிக் கிடக்கிறது! நகைகள்...ஒரு 'ஸ்ரீராஜ்மஹல்ஸ்' அந்த இரும்புப் பெட்டிக்குள்! அப்படியானால் பின் ஏன்தான் அவள் அழவேண்டும்? அழுகிறாளே...

ஆமாம் அவள் அழுதாள்! பிறக்கும்போதே அவள் அழுதுகொண்டுதான் பிறந்தாள்; அதைத் தொடர்ந்து அவளை ஈன்றெடுத்த அன்னை, அறையிலேயே மறைந்து விட்டபோதோ, அவளுடைய தந்தையையும் சேர்த்து அழச்செய்தாள்! அவரும் அழத்தான் அழுதார். ஏன்! ஏழைச் சமையற்காரரான அவர் இனிமேல் இந்தப் பச்சிளங் குழந்தையையும் கவனித்துக் கொள்ளவேண்டுமே! பணக்காரராயிருந்தாலும் யாராவது இரண்டாம் தாரமாகவேனும் பெண் கொடுப்பார்கள்! ஆனால், இந்தப் பஞ்சைக்கு யார் பெண்கொடுப்பார்கள்? ஏதோ அவருடைய 'நல்ல காலம்' இப்படித்தான் அவர் சொல்லிக்கொள்வார். அவருக்கு 'தண்டகாரண்யத்தில்'.-அதுதான்-கௌதமரின் இல்லத்துக்குப் பெயர் அவருக்கு வேலையும் கிடைத்தது! வேலை செய்த நேரம் போக மற்ற நேரங்களில் தன் பெண்ணை, 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்' என்று சிலர் சொல்லிக்கொள்கிறார்களே அந்த மாதிரி வளர்த்தார்.

காலம் மாறியது! அவள் இப்பொழுது கன்னியானாள்! S. S. L. C. படித்து முடித்துவிட்டாள்! இனிமேல் அவளுக்குத் திருமணம் செய்துவிட வேண்டிய பெரிய பொறுப்பு அவர் தலையில் விழுந்துவிட்டதாக அவர் எண்ணினார். வரன வேட்டையிலிறங்கிய அவர் அடிக்கடி தரகர் பதஞ்சலி சாஸ்திரியின் உதவியை நாடினார்! அந்த சந்தர்ப்பத்தில்தான் அவருடைய - ஏன் அகல்யாவின், வாழ்க்கையிலேயே ஒரு 'டேர்னிங் பாயின்ட்' என்று சொல்லும்படியான அந்தச் சம்பவம் நடந்தது! ஆமாம்! இன்னும் ஐந்து வருடங்கள் போனால் 'மணிவிழா' - அதாவது அறுபதாம் ஆண்டு நிறைவு விழா - கொண்டாடி விடலாம் என்று அடிக்கடி சொல்லி ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்த கௌதமரின் தர்மபத்தினி ஒருநாள் திடீரென்று, சொல்லாமல் கொள்ளாமல் சொர்க்கத்துக்குப் போய்விட்டாள் - அதாவது செத்துப்போய் விட்டாள். மனம் உடைந்து போனார் கௌதமர்! அவருக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது. அவருக்கு அவளைத் தவிர இந்த உலகத்தில் வேறு உறவே கிடையாது, பிள்ளை குட்டிகளும் இல்லை! அந்த ஒரு 'உறவும்' போன பிறகு அவருக்கு 'வாழ்க்கை' எப்படி இனிக்கும்? இந்த சமயத்தில்தான் ஒருநாள் அவர் வீட்டுக்கு 'விஜயம்' செய்த பதஞ்சலி சாஸ்திரிகள்' அவர் காதோடு காதாக அந்த 'மாற்றுத் திட்டத்தை' ஓதினார்! கௌதமரின் முகம் மலர்ந்தது! அப்பொழுதே அவருடைய அகமும் மலர்ந்துவிட்டது என்பது சாஸ்திரிகளின் விபூதிப் பையை சரணடைந்த பத்து ரூபாய் நோட்டுக்குக்கூடத் தெரியும்.

அகல்யாவின் தந்தை இருதலைக் கொள்ளி எறும்பானார்! அவர் மனதில் பணத்துக்கும், பாசத்திற்கும் இடையே ஓயாத போராட்டம்! ஆனாலும், என்ன? கௌதமர் என்ன சாமான்யமா? அந்த மாநிலத்திலேயே ஒரு பெரிய புள்ளி! சினிமா உலகமே அவருடைய சட்டைப்பைக்குள் கிடக்கிறது என்று சொன்னால் மிகையாகாது! கிடைக்கக்கூடிய இடமா! கடைசியில் பணம் வென்றது! அவ்வளவுதான்! ஒரு சுபயோக சுபதினத்தில் வேதப் பிராமணாள் (!) மந்திரம் ஓத, கெட்டிமேளம் முழங்க, அக்கினி சாட்சியாக, அம்மி மிதித்து, அருந்ததி காட்டிய பிறகு, 'தீர்க்க சுமங்கலிபவஹ' என்று தீந்தமிழில் 'தேவாள்' வாழ்த்த, கௌதமர் அகல்யாவின் கழுத்தில் 'மூன்று முடி'யைப் போட்டார். அவளும் 'தேவாள்' ஆசீர்வாதத்தில், ஐம்பத்தைந்து வயது வாலிபரை மணந்து, சகல சௌபாக்கியங்களுக்கும் இலக்காகி 'மகராசியானாள்'! இது பழைய கதை! வானம் பொத்துக்கொண்டது? மழை கொட்டியது! காற்று சுழன்றடித்தது! பேரிடி! பெருமின்னல்! வான மண்டலத்திலே பெரும் போராட்டமே நடந்துகொண்டிருந்தது. விளைவு! வையம் மழையைப் பெறுகிறது! இங்கேயும் அப்படித்தான்! அகல்யாவின் எண்ணத்திலே பெரும் போராட்டம்! இமைகளை மீறி வெளியே வழிந்தது கண்ணீர். சன்னல் கதவுகளைத் திறந்து எதிர் வீட்டை வெறித்துப் பார்த்தாள்! மழையிலே எதுவுமே தெரியவில்லை! இருட்டு! இருட்டு!! அவள் மனமும் இருளடைந்துதான் விட்டது. காற்று சுழன்றடித்தது; அவள் மனமும் சுழல ஆரம்பித்துவிட்டது!

படித்த பெண் அவள்! உலகம் தெரியாத பட்டிக்காட்டு ஜடமல்ல! அதிலும் படிக்கும்போதே அந்த உலகத்தை, அதுதான் காதல் உலகத்தைப் பற்றி முறையாகப் பயின்றிருக்கிறாள் ஒரு பத்திரிகாசிரியனிடம்! அவன்தான்-அந்த 'போகபூமி' பத்திரிகையின் ஆசிரியர்-இந்திரன்-அவள் பள்ளியின் மாணவர் மன்ற சிறப்புக் கூட்டத்துக்கு சொற்பொழிவாற்ற வந்தபோது-அவள் அவனைக் கண்டாள். கண்பார்வை-காதலாக மாறி, கடற்கரை, சினிமா. நாடகம், சிட்டிபஸ் இவைகளில் கட்டுப்பாட்டுடன் வளர ஆரம்பித்தது! இந்திரன் படித்த வாலிபன்-பத்திரிகாசிரியன்- பிரசங்கியுங்கூட! இதுவொன்றேபோதும்! இன்னும் அவன் நல்லவன்! நல்ல பண்புகளமையப் பெற்றவன்! அவளோடு அவன் பழகிய நாட்கள் அவனுடைய கண்ணியத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு! ஒருநாள்கூட தவறியும், உடலின்பத்தை அவளிடம் அவன், பேச்சாலோ, நடையாலோ வேண்டியதில்லை! அவளும் அபபடித்தான்! கருத்தொருமித்த காதலர்கள் தங்கள் திருமணத்தைப்பற்றிய 'கனவு'களை சுவைத்துக்கொண்டிருந்தனர். ஆனால்... ஆனால்...அப்பாவின் வறுமையும், பதஞ்சலி சாஸ்திரியின் தொழில் திறமையும், கௌதமரின் பணப் பெருக்கமும் அவளுக்கு - அவர்களுக்கு-வேறு வேறு திசையைக் காண்பித்துவிட்டன! திருமணத்திற்கு அவன் அனுப்பியிருந்த அந்தப் பரிசு - 'தேவதாஸ்' புத்தகம் - அவள் அதைப் படித்துப் படித்து அழுத நாட்கள்! திருமணத்திற்குப் பிறகு அவனை அவள் சந்திக்கவேயில்லை!

காலம் மாறியது! கனவும் கலைந்துகொண்டிருந்தது! கௌதமர் அவளுடைய வாழ்க்கையை மகிழ்ச்சி நிரம்பப் பெற்றதாக்க அந்த மாளிகையை பலவிதமாக அலங்கரித்திருந்தார்! உண்மைதான். ஆனாலும், அவரால் அவள் மனமாளிகையை அலங்கரிக்க முடியவில்லையே! பெண் விரும்பும் அந்த ஆசை...அது அவள் விஷயத்தில் கனவுதானா? அவள் அப்படித்தான் எண்ணினாள்! அவருக்கு எப்போதும் அலுவல்கள்! அலுவல்கள்! மீதி நேரங்களில் கோயில், குளம், பிரயாணம், பிரசங்கம் இரவு வெகு நேரத்திற்குப் பிறகு வீடு திரும்பும் வழக்கமுள்ள அவர், ஒருநாள்கூட அவளுடைய கட்டிலை நெருங்கியதே கிடையாது! 'கந்[illegible] சரணம்' என்ற ஒலியும், [illegible] தொடர்ந்து கர்-கர் என்ற கு[illegible] ஒலியும் அவள் கே[illegible]

அலுத்துவிட்டாள்! அவள் அழுவாள்! கட்டிலுக்குக் கண்கள் இருந்தால் அதுகூட அழும்! தலையணைக்கு மட்டும் வாய் இருந்திருந்தால் அது ஒரு துயரகாவியமே பாடிவிடும்!

எத்தனையோ 'மாலை நேரங்களை' அவள் அந்த ஜன்னலண்டை நின்று பெருமூச்செறிந்தபடியே கழித்திருக்கிறாள்! மாலைநேரம்... இளந்தம்பதிகள் கண்ணாடி ஒலியென கலகலவென நகைத்து கைகோர்த்து நடைபோடும் அழகு அவளுக்கு அழுகையைத்தான் தரும்! தோளிலே தொத்திக் கிடக்கும் அந்த மதலைகள் தங்கள் அமுதவாய் திறந்து, அம்மா, எனக்கு அம்புலியைப் பிடித்துத்தா என்று குழலினுமினிய குரலில் கேட்பதையும், 'இச்'சென்றஒலியும், அவைகளின் செம்பவள இதழ்களிலே தங்கள் அன்பு முத்தத்தை பதித்து, “அப்பா வரட்டும்! அந்த அம்புலியை மட்டுமல்ல! பக்கத்திலே கிடக்கின்ற அந்த மின்மினிப் பூச்சிகளையும் சேர்த்துப் பிடித்துத் தரச் சொல்லுகிறேனடா” என்று தாய்மை உணர்ச்சி பொங்க அந்தத் தாய்மார்கள் பதில் கூறுவதையும் கேட்கும்போதெல்லாம் அவள் ஏக்கத்தால் செத்துப் பிழைப்பாள்! வேதனையால் மனம் வெதும்பி அந்த அம்புலியை அண்ணாந்து நோக்குவாள்! ஆனால், அந்த வட்டநிலாகூட அவளுக்கு காட்சி தரமாட்டேன் என்று கூறுவது போல் முகிற் கூட்டங்களிலே சென்று மறைந்துவிடும்! அவள் விம்முவாள்! அவள் வாழ்விலே அந்தத் தேநிலவு! அம்புலி விரும்பும் அந்த செங்கதிர்கள்! 'அம்மா' என்ற அமுதமயமான அன்பழைப்புகள் இவைகளை அனுபவிக்கவே முடியாதா?

ஒருநாள் அவள் 'வட்டநிலா' கண்டே விட்டாள். ஆமாம்! உண்மையாகவே முழுமதியை - அல்ல-அல்ல! முகமதியை-அதே இந்திரன் தான்-அவனேதான் - அவனுடைய முகமதியைத்தான், கண்ணாடி சன்னலை ஊடுருவி அவளுடைய கண்கள் அவளுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டன! அந்த முகமதியை முற்றிலும் கண்களால்சுவைத்துவிட அது தெரிந்த எதிர்வீட்டு சன்னலை நோக்கினாள். ஆனால், ஆனால், ஏனோ அவன் 'படீ'ரென்று கதவுகளை சாத்திவிட்டுப் போய் விட்டான்! மறுபடியும் முழுநிலா முகிற்கூட்டத்திலே தன்னை மறைத்துக்கொண்டு விட்டது! அதன்பிறகு அவள் ஒவ்வொரு மாலைநேரத்திலேயும் எதிர்வீட்டு சன்னலை இமைக்காமல் பார்த்துக்கொண்டே ஏங்குவாள்! ஆனால் அந்த ஒரு நாள் சம்பவத்திற்கு அந்த சன்னலின் கதவுகள் திறக்கப்படவேயில்லை! அவன் அந்த வீட்டில்தான் குடியிருக்கிறான் இன்னமும். ஆனால், அவளை ஒருமுறைகூட பார்க்க, அவள் தன்னைப் பார்க்க அவன் விரும்பவில்லை! ஏன்? ஏன்? ஏன் இந்த வினாக்கள்? அவள் இதயக்கதவை 'பட பட'வெனத் தட்டின! அவள் மீண்டும் எண்ணச் சுழலிலிருந்து விடுபட்டாள்! கீழே வாசற்கதவை யாரோ 'தடதட'வெனத் தட்டும் சப்தம் கேட்டு ஓடினாள்! அகல்யா! அகல்யா! இருளைக் கிழித்துக்கொண்டு, இயற்கையின் பேரிரைச்சலையும் தாண்டி அவள் காதுகளிலே அமுதமெனப் பாய்ந்தது அந்தக் குரல்! கதவைத் திறந்தாள்! கற்சிலையானாள்? பிரகாசிக்கும் அந்த மின்சார வெளிச்சத்தில் கண்களிலே நீர் [illegible]றிய, கலைந்த கிராப்புடன், மழை[illegible] நனைக்கப்பட்ட ஈர உடை[illegible]ன் அவள் எதிரே இந்திரன் [illegible]நின்றுகொண்டிருந்தான்! வைத்தவிழி வாங்காது அவனையே நோக்கினாள் அகல்யா! இது என்ன! அவன் மண்டையிலே இரத்தம் வழிகிறதே! 'பளீ'ரென்று மின்னியது ஒரு மின்னல்! எதிர்வீட்டு மாடியின் கூரை இடிந்துவிழுந்திருப்பதை அகல்யாவின் கண்கள் ஒளி வெள்ளத்திலே பார்க்கத் தவறவில்லை! 'அத்தான்' என்று அலறிக்கொண்டே அவனை ஆரத் தழுவ ஓடினாள் அவள். ஆனால்... ஆனால்...என்ன ஏமாற்றம். அவன் ஒதுங்கிக்கொண்டான். அவள் மனம் ஒடிந்துபோனாள்.

★

வெளியே கொட்டும் மழை! உள்ளே படம் பார்ப்பவர்களின் கோரக் கூச்சல்! கௌதமரின் மனம் அலைபாய்ந்தது! அவரால் சகிக்கமுடியவில்லை? பாம்பரசன் என்பவர் கதை 'வசனம்' எழுதி, கூத்தரசன் 'டைரக்டு' செய்த அந்த 'நல்லதங்கா'வுக்குக்கிடைத்த அமோக வெற்றி இந்த இரண்டாவது காட்சியிலேயே அவருக்குப் புரிந்துவிட்டது! படம் பப்படம்! டப்பா! போட்ட முதல் அரோஹரா! அவருக்கு அகல்யாவின் ஞாபகம் வந்தது! 'பாவம் சிறிசு, இந்த மழையிலும் காற்றிலும் எப்படித் தனியாக இருப்பாள்? துணைக்கும் வேறு யாருமில்லை!' இப்படி எண்ணிய அவர் தியேட்டரை விட்டு வெளியேறி, கொட்டும் மழையில் தன் காரை தண்டகாரண்யம் நோக்கி வேகமாகச் செலுத்தினார்! காரைவிட கனவேகமாக அவருடைய சிந்தனை ஓடியது!

அவர் மனைவி இறந்தபோது மிகுந்த கஷ்டப்பட்டார். யாருக்கு இந்த சொத்துக்களை எழுதிவைப்பது என்ற 'பிரச்னை' வேறு அவரை வேதனைக்குள்ளாக்கியது! 'கோயிலுக்கு எழுதிவைக்கலாம்' என்று சிலர் யோசனை கூறினர். ஆனால், அவருடைய சீர்திருத்த மனம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில்தான் 'சாஸ்திரி' அந்த யோசனையைக் கூறினார்! இளம்பெண் அகல்யா! ஐம்பத்தைந்து வயதுக் கிழவனை மணக்க இசைவாளா என்ற சந்தேகத்திற்கு சாஸ்திரியிடமிருந்து 'அவன் சமையற்காரன்! அந்தப் பெண்ணுக்கு 'ஆசானான' பிள்ளையை எப்படித் தருவார்! எங்காவது இரண்டாம்தாரம்தான் கிடைக்கும்! அதன் சாதகத்திலேயே இரண்டாம் தாரம்தான்'லெபி'ச்சிருக்கு என்று ஸ்பஷ்டமாக பதில் வந்தது! அவரும் யோசித்தார்! தன் சொத்துக்கு வாரிசு, தன்னிடத்திலே தளராத நன்றியுடன் 15 வருடகாலமாக ஊழியம் பார்க்கும் சமையற்காரரின் மகள், 'அகல்யா' பொருத்தம்தான் என்று பட்டது! அகல்யாவும் தண்டகாரண்யத்துக்கு அதிபதியானாள்! அவள் மனம் கோணாதபடி சகல வசதிகளையும் செய்து கொடுத்தார் அவர். ஆனாலும், அவள் அழுதுகொண்டிருப்பதை எத்தனையோ இரவுகள் கண்டிருக்கிறார்! இருந்தும் என் செய்வது? அவள் தேவையைப் பூர்த்திசெய்ய அவரால் முடியுமா? என் முடியாது? முடியும். ஆனால், முடியாது! ஆமாம்! அவர் ஆண்மையற்றவர். இந்த ரகசியம் இறந்துபோன அவருடைய மனைவியைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது! அதோடு மாரடைப்பு வேறு! அவர் அடிக்கடி இதை எண்ணி உள்ளம் வெதும்புவார்.

கார் நின்றது! மழை இன்னம் விட்டபாடில்லை! காரை விட்டிறங்கிய அவருக்கு, இந்த நட்ட நடுநிசியில் கதவு திறந்து கிடந்தது ஆச்சரியத்தையும் பயத்தையும் ஊட்டியது! துடிக்கும் இதயத்துடன், நடுங்கும் உடலுடன் அடிமேல் அடிவைத்து நடந்தார்! மெள்ளக் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டே மாடிப் படிகளிலே ஏறினார். அங்கே! பேச்சரவம் கேட்டது! அகல்யாதான் பேசுகிறாள்!

'அண்ணா! இதுதான் நான் தங்களை, தாங்கள் 'அத்தான்' என்று அழைக்காதே என்று எனக்குத் தடை போட்ட பிறகு, 'அண்ணா' என்று அழைக்கும் முதல் தடவை! இதுவே கடைசி தடவையாகவும் இருக்கும். 'அத்தான்' என்று முன்பெல்லாம் பள்ளி வாழ்க்கையின்போது அன்பொழுக அழைப்பேன்! தாங்கள் 'என்ன என் அன்னமே' என்று ஆர்வத்துடன் பதில் தருவீர்கள்! அந்த நாட்கள்....கடந்துபோன நாட்கள்.....கனவுகள்! மாளிகை வாசியான 'அகல்யா' இப்படிமனம் வெறுத்துப் பேசுகிறாளே என்று எண்ணாதீர்கள். அகல்யா அந்தஸ்தில் உயர்ந்தவள்தான்! அவளுக்கு சகல பாக்கியங்களையும் தந்த 'கௌதமன்' கணவராக வாய்த்திருக்கிறார், உண்மை! ஆனால்... அவரால் அவள் வேண்டும் ஒன்றைத் தரமுடியாது. என்ன அது! அவரிடமிருந்து அவள் இன்னும் என்ன விரும்புகிறாள்! அவள் ஏன் அழுகிறாள்? கட்டி, முத்தம் தர அவரால் முடியாதே என்றா? காமப்பசி அடங்கவில்லையே என்றா? 'கட்டிலறை காவியம்' அவருக்குப் பாடத்தெரியவில்லையே என்றா? இல்லை! இல்லை!! இல்லை!!! அவள் அழுகைக்குக் காரணம் ஒரே ஒரு ஆசை! அந்த ஆசைதான் என்ன?

உலகத்திலுள்ள பெண்களெல்லாம், பெண் என்ற பருவத்திற்குப் பிறகு 'தாய்' என்ற உன்னத ஸ்தானத்தை அடைகிறார்களே! அந்த மதிப்பை அகல்யாவுக்குத் தர கௌதமரால் முடியாது! ஆனால், இந்திரனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தால் அந்த இன்பம் நிச்சயம் கிடைத்திருக்கும்! அதை நினைத்துத்தான் இந்த அகல்யா அழுகிறாள். புரிகிறதா இப்போது?' இப்படி கணீரென்று அவள் பேசிய ஒலிகள் அவருக்கும் ஆயிரம் தேள்கள் கொட்டியது போன்ற உணர்ச்சியைத் தந்தன! கௌதமரின் கண்களில் நீர் ததும்பியது! அவன்-இந்திரன் பேசினான்-கூர்மையாகக் கவனித்தார் அவர்.

'அகல்யா! கவலைப்படாதே' கடந்துபோன சம்பவங்களை நினைந்து கலங்குவது அறிவுடைமையாகாது? வருங்காலத்தை ஒழுங்காக வகுத்துக்கொள்! ஒரு காலத்தில் இந்திரன், அகல்யாவின் ஆசைக் காதலனாக, அன்பு அத்தானாக இருந்ததென்னவோ உண்மைதான்! ஆனால், அகல்யா கௌதமனின் மனைவியாகிவிட்ட பிறகு, இந்திரன் கனவுக் காட்சிகளைக் கலைத்துவிட்டான்! இப்பொழுது எனக்கு அகல்யா தங்கைதான்! மாற்றான் மனைவியை மாறுவேடம் தரித்து, கெடுத்த அந்தக் காலத்து இந்திரன் நான் அல்ல அகல்யா! மனதாலும் நினைக்கமாட்டேன் கௌதமருக்கு துரோகத்தை! நீயும் இராமாயண அகல்யா அல்ல!

“போதும் போதும்! இனி எனக்கு வாழ்க்கையே கிடையாதா? என் ஆசை...”

“கனவல்ல! அகல்யா! உன்னிடம் திரண்ட சொத்திருக்கிறது! அதை நல்ல வழியில் பயன்படுத்து. அனாதைப் பிள்ளைகளை வளர்க்க உன் 'ஐச்வர்யத்தை' உபயோகி! ஒரு பிள்ளைக்கல்ல! ஊர்பிள்ளைகள் எல்லாவற்றுக்குமே நீதான் தாய்.” உணர்ச்சி ததும்பப் பேசினான் இந்திரன்!

கௌதமரின் உள்ளம் வெடித்துவிடும் போலிருந்தது! உடல் ஆடியது! உலகம் சுற்றுவதுபோலத் தெரிந்தது. ஏதோ ஒரு மூலையில், அவர் சீர்திருத்தத்துக்கு இடம் கொடுத்திருந்தார் தன் மனத்தில். அது இப்போது வளர ஆரம்பித்தது! அவர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்! அந்த முடிவை அவர் மீண்டும் நினைவுக்கு கொண்டுவந்தபோது, அவரையறியாமல் அவருடைய கை, கைப்பிடியை விட்டுத் தளர்ந்தது! அடுத்த கணம்! அவர் 'அகல்யா' என்று அலறினார்!

அகல்யாவும் இந்திரனும்ஓடோடி வந்து பார்க்கும்போது அவர் மாடிப் படிகளிலே உருண்டுகொண்டிருந்தார்!

“அகல்யா! இந்திரன்!! உங்களின் காதல் வாழ்வுக்கு இடையூறாக நான் முளைத்ததை இன்றுதான் உணர்ந்தேன்! என்னை மன்னித்துவிடுங்கள்!

இந்திரா! உன் நல்ல பண்பைக் கண்டு நான் தலைவணங்குகிறேன்! சற்றுமுன் நீ அகல்யாவுக்குக் கூறிய வார்த்தைகள் என் அறிவுக் கண்களைத் திறந்துவிட்டன! ஆமாம்! நீ அந்தக் காலத்து இந்திரன் அல்லதான்! அகல்யாவும் இராமாயணஅகல்யாவல்ல! இதோ! இன்னொரு விஷயத்தையும் தெரிந்துகொள்! இந்தக் கௌதமனும் அப்படித்தான்! அந்தக் காலத்தவனல்ல! நான் கூறுவதை நன்றாகக் கவனியுங்கள்! நீங்கள் இருவரும் மறுமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியுடன்வாழுங்கள். அகல்யா! உன் ஆசை நிறைவேறிவிடும்! இனி நீ தாய்! இந்திரன் உலகத்திலுள்ள அத்தனை அனாதைப் பிள்ளைகளுக்கும் தந்தை! இந்த கௌதமன் இனி உயிருடன் இருக்கமாட்டான்! விடுதியின் போர்டிலே 'கௌதமன் அனாதை விடுதி' “என்பதிலேதான் இருப்பான்.” இப்படிக் கூறிய அவர் நிம்மதியாகக் கண்களை மூடினார்!

'அப்பா' என்று அலறினாள் அகல்யா! இந்திரன் திகைத்து நின்றான்!

வெளியே மழை நின்றுவிட்டது! மீண்டும் முழுமதி வானத்திலே துல்லியமாகப் பிரகாசித்தது! விடியப்போகிறது என்பதற்கறிகுறியாக வெள்ளி முளைத்துவிட்டது! இனிமேல் இதுவரை நடந்த சம்பவங்கள் 'நேற்று' என்று பேசப்படும்! இனி வரும் சம்பவங்கள் 'இன்றும் நாளையும்' ஆகும்!

— அன்புத்தம்பி

◉

தென்றல்

ஆண்டு சந்தா ரூ 6-0-0

ஆறு மாத சந்தா 3-0-0

(மூன்று மாத சந்தா கிடையாது)

விபரங்கட்கு.

“தென்றல்”

சென்னை-6.

இலக்கியத்தில்

கூளப்ப நாயக்கன் காதல்

—: காரை முத்துப்புலவர் :—

" என்னிடத்தில் கோபமென்ன?"
என்று, ஏகாந்த வெளியிலே கேள்வி கேட்கிறாள்.
"பொற்பகலா மாதவியே !
புன்னையே ! சண்பகமே !
கற்பகமே ! என்னுசைக்
கற்பகத்தைக் காணீரோ !
முன்மான் பிணைநடக்க
மோகமாய்ப் பின்தொடரும்
பொன்மானே ! என்னுசைப்
பூமானைக் காணீரோ !
தோய்ந்த ரவியைத் தொடர்ந்த
முகசூர்ய
காந்தமே ! என்னுசைக்
காந்தன் வரக் காணீரோ !"

"என்னிடத்தில் மாலாகி, இச்சை சொல்லிச் சேர்ந்தானே ! பின் எனக்கோர் 'அந்தரங்கம்' பேசாமற் போவானேன் ! கானகத்தில் நான் உலவுவது கண்டு, தனியான பெண்ணைக் கனிவாகப் போய் அணையும் இந்திரனே ஓடிவந்து சேர்ந்து மறைந்துவிட்டானோ ! ஒருவேளை எவனுவது கந்தருவன் எனப்படுபவன் மானிடனாக வந்து மறைந்துவிட்டானே! சண்டாளன்! சொல்லிக் கொள்ளாமலே போய்விட்டானே ! இந்திரன் என்றால், கண்கள் ஆயிரம் இருக்குமென்பார்களே - இவனுக்கு "அரிக்கன்விளக்கு" மாதிரி இரண்டு கண்கள்தானே இருந்தன! கந்தருவன் என்றால், கண் இமைக்காது, இளநீரைக் கண் திறந்து வைத்தது போலிருக்குமென்பார்களே, இவன் கண்களை மூடி மூடியல்லவோ, உல்லாச உலகைத் தேடினான் ! இல்லை ! அவர்களெலாம் இல்லை ! வந்தவன் கூளப்பன்தான் ! அடடா !

" மன்மதனை வென்று வயங்கும்
திருவழகை
என்மனதுக் குள்ளே எழுதவோ
வந்தகன்றான் ?
கூடியின்பங் கண்ட குதலைமொழிப்
பேதைநம்மைத்
தேடிமுகம் வாடித் தியங்கு-
வளென் றெண்ணானே !"

இப்படிச் செய்வானென்று தெரிந்திருந்தால், கைகலக்கும் முன்பே, தந்திரமாக மூன்று முறை" கைவிடவில்லை ! கைவிடமாட்டேன் ! கைவிடமாட்டேன் !" என்று ஆணை வாங்கிக்கொண்டிருப்பேனே! ஒருவிதமான ஒப்பந்தமும் இல்லாமல் உடன்பட்டு விட்டேனே ! இனி, அவனைத் தொடர்வதற்கு 'ரெக்கார்டு' என்ன இருக்கிறது ! தன்னெஞ்சம்போலத் தழுவிப் பிரிந்திருக்க வன்னெஞ்சி என்றோ, மறக்கத் துணிந்தான் ? பெரிய நகரில் போய்த் தேடுவோம் என்றாலும் அவன் தன் ஊரை, ஒரு ஊரென்று சொல்லவில்லையே ! ஒன்பது ஊரென்றானே !"

என்று வாடி வதங்குகிறாள் ; எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுகிறாள் ! எண்ணி, அறிவயர்ந்து போகிறாள்.

"இவ்விடத்தில் மெய்சோர்ந்
திவள்கிடக்க வெவ்வேறாய்
அவ்விடத்திற் பூவெடுத்த
ஆயிழையார் எல்லோரும்
குன்றிரண்டு தாங்கும்
கொடிபோல் இடைதுவள
நின்று மலர்பறித்த நேரிழையைக்
காணாமல்
'மற்றோர் வனமோநாம் வந்தது'
எனத்திகைத்துச்
சிற்றடியைக் கண்டார்; திரண்டார்
ஒருமுகமாய் !"

இவ்வாறு தோழியரெல்லாம் அவளைக் கண்டுபிடித்து, "தேன்மொழியே! தேன்மொழியே!" என்று அழைக்க, மதிமறந்த நிலையில் அவள் கிடக்கிறாள். கையணையில் சாய்ந்து, கண்முகிழ்ப்பத் தையல் கிடப்பதறியாமற் பாங்கியர்கள், "தூக்கமோ! வெம் பசியோ! தோழியரைக் காணாத ஏக்கமோ? களைபட்ட காரணமோ!" எனத் திகைக்கிறார்கள். கிட்ட அமர்ந்து, மாந்தளிரால் வீசி, மதிமுகத்தின் வெயர்துடைக்க, ஏந்திழையாள் மூர்ச்சை தெளிந்து ஏங்கினாள் போலிருந்தாள். ஒண்டொடியார் மங்கையின் உடல்நிலை கண்டு "இது ஏது?" என்கிறார்கள். கள்ளிக்கு வாயுமுண்டோ? கை நடுங்கி, கால் நடுங்கி, கன்னியர்களெல்லோரும் மெய்நடுங்கித் தாமே விசாரமிட்டுக்கொண்டு நிற்கிறார்கள். மடமானைக் கைலாகு கொடுத்து, மெல்ல மெல்லத் தாம் நடத்தி வீட்டிற்குக் கொண்டு போகிறார்கள். பாகார் மொழியாளைப் பஞ்சணையில் சேர்க்கிறார்கள். உடனே, மோக அனல் மீற, உடம்பு கொதிக்க, கழுத்திலிருந்த முத்துமாலை பொரிந்துபோகிறது !

கண்டு சகியார், கருத்திற் சகியாராய் ஒண்டொடிக்குச் சீத உபசாரம் செய்கிறார்கள். இந்த உபசாரங்களை அவள் விரும்பவில்லை. விரகதாபத்தால் வெதும்புகிறாள். சகிமாரைத் திட்டுகிறாள்.

பின் நடந்த கதையையும், தாய் சொல்லும் வார்த்தைகளையும் முடிவையும் சுப்ரதீபக்கவியின் வாய்மொழியாகவே கேளுங்கள் :

" கண்டு சகியார் கருத்திற்
சகியாராய்
ஒண்டொடிக்குச் சீத உபசாரஞ்
செய்யலுற்றார்.
செய்தஉப சாரமெல்லாம் தேனாள்
பொருளாகி
வைதுமட் வாரை மனங்கொதித்துச்
சொல்லலுற்றாள்:
"சாளரத்தை நீக்கித்
தனிப்புலியைப் பாயவிட்டு,
நீளுமலைத் தென்றலென்றீர்,
நிட்டூரஞ் செய்திரே !
காமரச மெல்லாங் கனகமஞ்ச
மேற்பரப்பிப்
பூமலர்என் றீர், மடவீர்! பொய்யும்
படித்திரே !
சேலென்ற கேதனத்தோன்
தேமாலை யைப்பிழிந்து
பாலென்று தந்தீர், பழிகாரர்
ஆனீரே !
மங்கைநல்லீர் ! என்றன்.........
நீர்அணிந்த
குங்குமமுஞ் சாந்தும் குளிர்ந்த
பனிநீரும்
தேடும் பரத்தையர்பாற் காதலனைச்
செல்லவிட்டு,
வாடும் மனையாள் மனம்போற்
கொதிக்கு(து)' என்றாள்.
என்னப் புலம்பி இவள்படும்பா
டத்தனையும்
அன்னைக்குச் சொன்னார்;
அவள்பதறி ஓடிவந்தாள்.
பெற்றெடுத்த தன்மகளைப்
பேய்க்கிழவி யானாலும்,
குற்றமற நோக்கிக் குறிப்புறவே
கண்டுகொண்டாள்.
பார்த்தாள்; உடன்போன
பாங்கியரைச் சண்டையிட்டாள்
வேர்த்தாள், மகளை வெகுண்டாள்,
விசாரமிட்டாள்.
'நீங்களறி யாமலிந்த
நேரிழையைப் பூங்காவில்
ஆங்கொருவன் கூடி அணைந்த-
வகை சொல்லும்' என்றாள்.
'போனதும் வெவ்வேறாய்ப்
பூவெடுக்கும் மங்கைதனி
யானதுவும் கண்டதுவும்
ஆயிழையார் தாமுரைத்தார்.
சந்த...யார்உரைக்கத் தையல்குண
மாலைசொல்வாள் :
' அந்த வனத்தில் அசுகையுற்ற
வேளையிலே,
சுற்றியபடி பார்த்தேன்;
துரைகளடி போல்அதிலே
உற்றசங்க ரேகை யுடன்பதும
ரேகை கண்டேன்.
அச்சுவடு கண்ட அசுகையல்
லாற்புவனம்
மெச்சு நிலக்கோட்டை வேள்பெரிய
நாகேந்த்ரன்
வேட்டைக்கு வந்தானும், மேளத்
தொனியுமந்தக்
காட்டில் வெடித்தொனியும்
காதாரக் கேட்ட(து)' என்றாள்
'அப்படியோ ? சொல்என்
அமிர்தகுண மாலைமின்னே!
செப்படிவித் தைத்தொழிலிற்
சித்திரத்தைக் கண்டானோ ?
வண்டார் குழலாய் ! மதன்பெரிய
நாகேந்த்ரன்
கண்டால்நான் ஈன்ற
கரும்பைவிட்டுப் போவானோ ?
அந்தத் துரையழகைக்
கண்டாலும், நான்ஈன்ற
பைந்தொடியுந் தானொருகை
பாராமல் மீள்வாளோ ?
எம்மையறி யாமல்இவள்
எப்படித்தான் கைகலந்தாள்,
நம்மையறி யாமல்அந்த
நாயகன்எவ் வாறணைந்தான் ?
கன்னம் ஒருவரிட்டாற் காவலனோ
டேயுரைப்போம்;
மன்னவனே இந்த வலுமை-
செய்தால் ஆர்க்குரைப்போம் ?
பாகார் மொழியாளைப்
பன்றிமலைச் சாரலுக்குப்
போகாதே என்றுசொன்னேன்,
புத்தியாய்க் கேட்டாளோ?
பேய்வார்த்தை யானாலும்
பெற்றபிள்ளை கேட்பதுண்டு,
தாய்வார்த்தை கேளாத் தங்கச்சி
மூப்பாச்சே !
தெண்டிக்கும் மன்னவனைச்
சேர்ந்தவலுக் காரியைநான்
கண்டிக்கப் போகாதே,
கள்ளியெனக் கூடாதே !
மானபரன் பெஞ்சை மகராச
னைமருவப்
போனவளே யன்றிஇவள்
பூவெடுக்கப் போனவளோ ?
விந்தைதரும் ஒன்பதூர்
வேந்தனுக்கு மோகினிமா
மந்திரமுண் டென்றென் மதலை
யறியாளோ ?
தூயபுகழ் பெஞ்சைத்
துரைக்குநமைப் போல்மடவார்
ஆயிரம்பேர் உண்டென்(று)
அரங்கி அறியாளோ ?
பூங்கொடிசூழ் தண்டலையிற்
பூவெடுக்கப் போனஉயிர்ப்
பாங்கிமார் தாமிருக்கப்
பாவைதனைச் சேர்வானேன் ?
நம்மையறி யாமல் நடந்ததல்லால்,
யாவர்க்கும்
சம்மதிக்கும் காரியமே தையல்
நடத்திவந்தாள்.
மன்ன னழகுக்கென் மகளே
மனையாளாம் ;
கன்னியழ குக்கும்அந்தக்
காவலனே காதலனும்.
மாவடுக்கண் மங்கையென்ன
மாதவம்முன் செய்தாளோ ?
பூவெடுக்கப் போனாள், புதையல
லெடுத்துவந்தாள்;
பையப் பழம்நழுவிப் பாலில்
விழுந்ததுநான்
செய்ததவ மோ,மகள்முன்
செய்தபூ சரபலமோ !
என்று மகளை இருகையால்
தான்தழுவி,
'ஒன்றுக்கும் அஞ்சாதே,
யோகமுமுன் பங்காச்சே !
சிந்தமகூ ளேந்த்ரனருள்
சேய்பெரிய நாயகனைச்
சொந்தமாய்க் கூடிச் சுகித்துமிக
வாழ்ந்தி'ரென்றாள்
'காவுலவு மின்னே ! கனகபல்லக்
கேறி,இந்தப்
பூவுலகு கொண்டாடப் புத்திரனைப்
பெற்றி'ரென்றாள்.
என்னுமந்த வேளைசில
ஏந்திழையார் சூழ்ந்துவர
வன்னமணிப் பொற்சிவிகை
வாயில்வரக் கண்டாளே.
கண்டாள் மகளைக் கனகபல்லக்
கேற்றிஇன்பங்
கொண்டாள், குணமாலை கூடச்
செலவிடுத்தாள்.
சொற்படியே அந்தத் துரைபெரிய
நாயகனும்
கற்பகத்தைக் கூடிஅவன்
காதல்கொண்ட காதலியாய்ப்
பூதலத்தோர் வாழ்த்தநல்ல
புத்திரரைப் பெற்றெடுத்து
மாது நவரத்ன மாலைமகிழ்
வுற்றிருந்தாள்,
சீர்வாழி, லோகம் செழித்துமிக
வாழி,ஒன்ப
தூர்வாழி, வெள்ளை யுபய
கொடிவாழி,
பெஞ்சைநகர் வாழி பெரியநா
கேந்த்ரதுரை
கஞ்சமுக மாது கருணைபெற்று
வாழியவே."

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

ஒரு கூட்டம் நினைத்துக்கொண்டிருக்கிறது. தமிழ் அழிய வேண்டும் என்பது அவர்கள் ஆசை. ஒவ்வொரு தமிழன் வீட்டுப் பக்கத்திலும் ஐந்தாம் படை வேலை செய்கிறது. எந்தப் பெயரைச் சொல்லியாவது தமிழை ஒழிக்கவேண்டுமென்பது அந்தக் கூட்டத்தின் எண்ணம்.

தமிழ் நாட்டிலே தமிழர்கள் தமிழிலே இசை பாடவேண்டும் என்றதும் அந்தக் கூட்டம் கிளர்ந்து எழுந்து பாட்டுக்குப் பொருளே வேண்டியதில்லைஎன்றுசொன்னது, தமிழிசையில் தமிழ் தவிர வேறு எந்த மொழியாவது புகுந்து கொள்ள வேண்டும் என்பது அந்தக் கூட்டத்தின் ஆசை. மேலும், அந்தக் கூட்டம் தமிழிலே இசை இல்லை என்றும் தமிழிலேபாடினால் நன்றாக இராது என்றும் சொன்ன போது, நம்முடைய பாரதியார் "ஏ முட்டாளே ! நீ தமிழ்நாட்டை விட்டு வெளியே போ" என்று சொன்னார். இந்தி கட்டாய பாடமாக ஆக்கப்பட்டபோதும் பாரதியார் அப்படியே சொன்னார்.

ஆரியர் தமிழர் வேறுபாட்டைப் பாரதியார் பல கூட்டங்களில் நன்றாக விளக்கியிருக்கிறார். பாரதியார் அவர்களே, உங்களால் தமிழ் காப்பாற்றப்படப் போகிறது. செட்டி நாட்டரசர் அவர்களும் உங்கள் பக்கம் இருக்கிறார்கள். பல கோடித் தமிழர்கள் உங்கள் பக்கத்திலேஇருக்கிறார்கள். எனவே நீங்கள் தைரியமாக தமிழுக்காகப் போராடலாம். பாரதியார் அவர்கள் நீண்ட நாட்கள் உடல் நலத்தோடு இருந்து, தமிழுக்குப் பெரிய நன்மைகளைச் செய்யவேண்டும். அரசர் முத்தையா அவர்கள் நீடூழி வாழ வேண்டும். தமிழ் உயர நாம் அனைவரும் பாடு[illegible]வோம் என்று சொல்லி வி[illegible] பெற்றுக் கொள்ளுகிறேன்.

கேட்டு எழுதியவர்: அன[illegible]



ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி

மங்கை, அவளுடைய காதலனை சிறை வைக்கச் சொன்னது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. உள்ளத்தால் ஒன்றுபட்டிருந்த மங்கை திடீரென்று ஏன் இப்படி மாறிவிட்டாள்? அவனுக்கு விபரம் ஒன்றும் புரியவில்லை. காவலர்கள் இழுத்துச்செல்ல, மங்கை சென்றுகொண்டிருந்த ரதத்தையே பார்த்துக்கொண்டு வந்தான் அவளுடைய காதலன். சிறிது நேரத்தில் புழுதிப்படலம் கிளம்பி ரதத்தை மறைத்துவிட்டது. அதே மாதிரி, இனந் தெரியாத வருத்தத்தின் சாயையும், அவன் இதயத்தைக் கவ்வியது.

மங்கை சென்ற ரதம் ஒரு மாளிகையின் வாயிலில் நின்றது. மங்கை முதலில் இறங்கினாள். கமலினி இறங்குவோமா, வேண்டாமா என்று தயங்கிக்கொண்டிருந்தாள். "இறங்கு கமலினி!" என்றாள் மங்கை. "இல்லை அக்கா! இனி நான் எங்கும் வரவிரும்பவில்லை, நான் சாகவேண்டும். அதற்கு முன்னால்...என்று முடிப்பதற்குள், மங்கை குறுக்கிட்டு, "ஏன் இந்த அவசரம்! வா!" என்று கமலினியின் கையைப் பிடித்து, ரதத்திலிருந்து இறக்கினாள். கமலினியின் கண்கள் கலங்கி, சிவப்பேறியிருந்தன. மங்கை அதைக் கவனிக்கவில்லை. அவள் கையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, மாளிகைக்குள் நுழைந்தாள்.

உள்ளே ஒரு அறையில் இருவரும் நுழைந்தார்கள். அப்பொழுதுதான், கமலினி கண்ணீர் விட்டு, விம்மி அழுவதை மங்கை கண்டாள். "நீ நன்றாக அழு, ஆத்திரம் தீர அழுது தீர்த்துவிடு. அப்படிச் செய்தாலாவது மனதிலுள்ள துயரச் சுமை குறையும். சிறிது ஆறுதலும் ஏற்படும். பிறகு இருவரும் அன்னையிடம் சென்று நடந்ததைக் கூறலாம்" என்றாள் மங்கை. பொங்கிவரும் துயரத்தை அடக்கமுடியாமல் மேலும் பொருமினாள் கமலினி. மங்கை அவளுக்கு ஆறுதல் கூறி படுக்கையறைக்கு அழைத்துச் சென்றாள்.

தனக்குக் கொஞ்சம் வேலையிருப்பதால் வெளியில் சென்று வருவதாகவும், அதுவரை நிம்மதியாகப் படுத்து ஓய்வெடுத்துக்கொள்ளும்படியும், கமலினியிடம் சொல்லி அவளைப் படுக்கவைத்தாள் மங்கை. கமலினியும் படுக்கையில் படுத்துக்கொண்டாள். அவளுடைய உள்ளத்திலே கிளர்ந்தெழும் புயல்போன்ற துயர எழுச்சியை, ஓரளவு அறிந்துகொண்டாள் மங்கை. அவளை தனியே சிறிதுநேரம் விட்டுச் செல்வதுதான் தகுந்த மாற்று என்று நினைத்து அங்கிருந்து அகன்றாள்.

சாந்திமத்தீவு மகிழ்ச்சியிலும் ஆரவாரத்திலும் நிரம்பி வழிந்தது. எங்கு பார்த்தாலும் ஆலங்காட்டிலிருந்து திரும்பிவந்த வீரர்கள், தங்கள் மனைவிமக்களுடன் சிரித்துப் பேசி மகிழ்ந்துகொண்டிருந்தனர். இதைப் பார்த்த மங்கையின் உள்ளத்திலும், தன் காதலனைப்பற்றிய நினைவு எழுந்தது. ஓட்டமும் நடையுமாக கடற்கரையை நோக்கிவந்தாள்.

அப்போதுதான் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு படகில் மங்கையின் காதலன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கருகில் ஒரு வீரன் துடுப்பைக் கையில் பிடித்துக்கொண்டு தயாராக உட்கார்ந்திருந்தான். மற்றொரு வீரன் படகை, மணற்பரப்பிலிருந்து தண்ணீருக்குள் தள்ளிக்கொண்டிருந்தான்.

மங்கை வேகமாக வந்ததால் அவள் நெற்றியில் வியர்வைத்துளிகள் அரும்பியிருந்தன. நெற்றியில் படிந்திருந்த கேசங்களை ஒதுக்கிவிட்டுக்கொண்டே, கடற்கரையை நெருங்கினாள். மங்கையைக் கண்டதும் படகை தண்ணீருக்குள் தள்ளாமல், வியப்புடன் அவளை எதிர்பார்த்து நின்றான் அந்த வீரன். படகிலிருந்த வீரனும் கீழே குதித்து கரைக்கு வந்தான்.

மங்கையின் காதலனுக்கோ இந்தச் சம்பவங்கள் வியப்பையளித்தன. தன்னிடம் உள்ளத்தைப் பறிகொடுத்த மங்கையின் போக்கு அவனுக்கு விசித்திரமாகப்பட்டது. நெஞ்சில் நிறைந்தவளே நெருப்பாக மாறியதும், பயித்தியம்போல, தன்னந்தனியே மீண்டும் அங்கு ஓடி வருவதும் அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தன.

படகை நெருங்கியதும் "இன்னும் ஏன் தாமதம்?" என்று வீரர்களை அதட்டிக் கேட்டாள் மங்கை. "இதோ புறப்படத் தயார்!" என்றான் ஒரு வீரன்; "அவனைஇந்தத் தீவிற்குள் அனுமதித்ததே தவறு! அவனை கோமளத்தீவிற்கு, உடனே கொண்டு சென்று சிறை வைக்காதது, அதைவிடப் பெரிய தவறு!" என்று கடிந்தாள். வீரர்கள் இருவரும் மௌனமாக நின்றனர். மங்கையின் முகத்தில் தோன்றிய கோபக்குறியும் அவளுடைய காதலனுக்கு அழகாகவே தென்பட்டது. அதை மிகவும் ரசிப்பவன்போல் அமைதியாகப் படகில் நின்றுகொண்டிருந்தான். மங்கை தன் காதலனை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால் அவன் முகத்திலிருந்து எதையும் அவள் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

"சரி! நான் கொண்டுபோய் இவனைக் கோமளத்தீவில் சிறை வைத்து வருகிறேன். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்!" என்றாள் மங்கை, வீரர்கள் இதைக் கேட்டுத் திகைத்தனர். மங்கை அவனைத் தனியாக அழைத்துச் செல்வதற்காக அவர்கள் திகைக்கவில்லை. இது அவளுக்குப் பழக்கம்தான் என்பது அவர்களுக்குத் தெரியும். தங்கள் வேலையில் குற்றம் கண்டு கடிந்த மங்கை, தங்களுக்கு ஏதேனும் தண்டனை விதிப்பாளோ என்றே திகைத்தனர்.

"ஏன் நிற்கிறீர்கள்? படகைத் தண்ணீரில் தள்ளிவிட்டு நீங்கள் மாளிகைக்குச் செல்லலாம். இனி இவ்வாறு தாமதமாக, "நீங்கள் நடந்துகொள்ளக்கூடாது. தாயகத்திற்கு நலமே புரிவீர்" என்ற தாரக முழக்கத்தை மறந்துவிடாதீர்" என்று எச்சரிப்பவள்போல நடித்துக்கொண்டு படகில் ஏறி உட்கார்ந்தாள். காவலர்கள் படகை கடலில் தள்ளிவிட்டு கரையில் வந்து நின்றனர். மங்கை படகைத் துடுப்பால் தள்ளிக்கொண்டு சென்றாள். கரையிலிருந்த வீரர்கள் 'அன்னை வாழ்க!' என்று முழக்கமிட்டுத் திரும்பினர்.

கரையில் நின்ற உருவங்கள் மறையும்வரை, மங்கை தன் காதலனை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. அவனும் அலட்சியமாகக் கடலையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். திடீரென்று படகு நின்று,

மோதும் அலைகளில் தள்ளாடியது. அவன் நிமிர்ந்து பார்த்தான். மங்கையும் அவனைப் பார்த்தாள். இப்போது அவள் துடுப்புத்தள்ளவில்லை. அந்தத் துடுப்பை அவனிடம் நீட்டி,, "ஐயா கைதியே! உமக்கு இப்போது வேறொரு தண்டனையளிக்கிறேன். இதோ, இந்தத் துடுப்பினால் படகைச் செலுத்தும் " என்றாள்.

அவன் பேசாமலிருந்தான். மங்கையின் இதழ்க் கடையில் புன்முறுவல் நெளிந்தோடியது! "நீங்கள் இப்போது கைதி. ஞாபகமிருக்கட்டும் " என்றாள். "ஆமாம். உன் மனச்சிறையில்!" என்றான் அவன். "அதற்காகவே உங்களைக் கோமளத்தீவிற்குக் கொண்டு செல்கிறேன் " என்றாள் மங்கை! வீரரை விரட்டிவிட்டு, நீ என்னுடன் புறப்பட்டதுமே புரிந்துகொண்டேன் " என்றான் மங்கையின் காதலன்.

"அப்படியானால் என் இதுவரை மௌனம் சாதித்தீர்கள்?"

"காவலர்களுக்கு முன்னால், என்னைக் கைது செய்யும்படி ஏன் கட்டளையிட்டாய்?"

"இருவரும் இப்படி ஏகாந்தமாய்ச் செல்ல!"

"எங்கே?"

"கோமளத்தீவுக்கு!"

"அது எங்கேயிருக்கிறது?"

"அதோ பாருங்கள் பசுமையான சோலையை! அதுதான் கோமளத்தீவு! அதிருக்கட்டும்; கைது செய்து, கோமளத்தீவுக்கு கொண்டு செல்லும்படி உத்தரவிட்டதும், உண்மையிலேயேபயந்துவிட்டீர்களல்லவா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் மங்கை..

"அல்லிராஜ்யம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்! ஆனால், உண்மையான ஒரு 'அல்லி'யின் ஆட்சியை இங்கேதான் கண்டேன். விசாரணையில்லாத தீர்ப்பையும் இங்கேதான் அனுபவித்தேன். இந்த ஆட்சியின் போக்கை நினைத்தே மௌனம் சாதித்தேன். ஆனால் பயப்படவில்லை. உண்மை வீரன் இதற்கெல்லாம் பயப்படுவானா?" என்றான் மங்கையின் காதலன்.

"அல்லியின் ஆட்சியல்ல இது: அன்னையின் ஆட்சி! கொள்கைக்காக,நாட்டின்நலனுக்காக அன்னை நடத்தும் சத்திய ஆட்சி. ஆனால், குற்றவாளி என்று முன்பே தெரிந்திருந்ததால்தான் விசாரிக்காமல் சிறை வைக்கச் சொன்னேன்" என்றாள் மங்கை!

"குற்றமா! என்ன குற்றம்?"

"இரண்டு குற்றங்கள்!"

"எனக்குத் தெரிந்தவரையில், அன்னையின் ஆட்சிக்கு எதிராக, நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை!"

"நான் சொல்லுகிறேன் கேளுங்கள். நீங்கள்இடைதுறை நாட்டுக்குச் சென்றிருந்ததை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அங்கே அவமானத்திற்குப் பலிவாங்கியதாக என்னிடம் வந்து சொன்னீர்களே நினைவிருக்கிறதா?"

"ஆமாம்! ஆனால் நான் பெயரொன்றும் உன்னிடம் குறிப்பிடவில்லையே!"

"அதுதான் முதற் குற்றம். இரண்டாவதுகுற்றம் ஓர் அபலையை, கடமையில் கண்ணுயிருந்த கமலினியை, அன்னையின் ஆளாக இருந்து ஒற்று வேலை செய்த உத்தமியை, சோழநாட்டை ஆபத்திலிருந்து பாதுகாக்க, அரும்பாடுபட்ட அழகியை நீங்கள் கற்பழித்துவிட்டீர்கள்!"

இதைச் சொல்லும்போது மங்கை அழுதேவிட்டாள். அவள் காதலன் இதை எதிர்பார்க்கவில்லை. வாயடைத்துப் போனான். ஆயினும் மனதைத் திடப்படுத்திக்கொண்டான். உண்மையை அவளிடம் ஒளிக்காமல் சொல்லிவிடுவதென்றும் தீர்மானித்தான்,

இதற்குள் படகு கரைவந்து சேர்ந்தது. இருவரும் படகிலிருந்து இறங்கி பக்கத்திலிருந்த சோலையை அணுகினர். பொழுது போய்விட்டது. நிலா வானத்திலே வட்டமிட்டிருந்தது. பசுமை நிறைந்த அச்சோலையில் பளிங்கு மண்டபங்களும் மேடைகளும், அல்லியும் தாமரையும் நிறைந்த ஓடைகளும் ஆங்காங்கே காணப்பட்டன.

மங்கைக்கு ஒருபுறம் கரைகாணாத ஆனந்தம், காதலனுடன் தனித்து வந்ததற்காக:தன் காதலனிடமே, கற்பிழந்த கமலினியை நினைக்கும்போது மற்றொருபுறம் ஆத்திரம். ஆனந்தமும், ஆத்திரமும் மாறி மாறி ஏற்பட ஒன்றும் பேசத் தோன்றாதவளாய் ஒரு பளிங்கு மேடையில் உட்கார்ந்தாள்.

அவள் உள்ளம் வேதனையால் வெந்துகொண்டிருப்பதை அறிந்து கொண்டான் காதலன். அவள் பக்கத்தில் அமர்ந்தான். அவளைத் தன் மடியில் படுக்கவைத்தான். அவள் தலையைக் கோதினான். இப்போது அவனுடைய உள்ளம் கமலினியின் சோகக் கதையைத் தெரிவிக்கத் தயாராகிவிட்டது. அவன் நடந்ததையெல்லாம் சொன்னான். மங்கை கண்மூடி, மௌனமாகக் கேட்டாள்.

கடைசியில் அவன் சொன்னான்; "மங்கை! கமலினியை இடைதுறை நாட்டுப்பெண் என்று நினைத்து, ஆத்திரத்தில் அறிவிழந்தேன். அது பெரிய குற்றம். மன்னிக்க முடியாத குற்றம். தமிழ் நாட்டிற்கு, அதிலும் சோழநாட்டிற்கு மானக்கேடுதான். அந்தச் சம்பவம் அன்றுமுதல் என் உள்ளத்தைப் பொசுக்கி வருகிறது. அதற்குப் பிராயச்சித்தமாக நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன்" என்றான்.

அவனுடைய உள்ளம் அந்தச் செய்கையால் வருந்துவதை அவள் உணர்ந்துகொண்டாள். பதில் பேசவில்லை. கண்களை விழித்து, காதலனைப் பார்த்தாள். அந்தப் பார்வையிலே கவர்ச்சியிருந்தது. காந்தம் இருந்தது. இதயத்தைத் தாக்கும் சக்தியிருந்தது. அவன் அவளையே பார்த்தான். இனியும் அவனால் பார்த்துக்கொண்டேயிருக்க முடியவில்லை. அவள் உதடுகள் துடித்தன. அவன் குனிந்தான். "இச்" சென்ற ஒலி நிம்மதியான அச்சோலையிலே நன்கு கேட்டது.

முழுநிலா வானத்தில் ஒய்யாரமாகக் காட்சியளித்தது. தென்றல் பசுஞ்சோலையையும், அதனுள் மறைந்திருந்து களவொழுக்கத்தை மேற்கொள்ளும் காதலர்களையும் தழுவிச் சென்றது, இடையிடையே மரங்களில் கூடுகட்டி வாழும் பறவைகளின் ஓசை, இதைத் தவிர எவ்வித சலனமுமின்றி, கோமளத்தீவின் அந்தச் சோலை காட்சியளித்துக்கொண்டிருந்தது. மங்கைக்கும், அவளுடைய காதலனுக்கும் நேரம் போய்க்கொண்டிருப்பதே தெரியவில்லை. இருவரும், பல மேடைகளையும் ஓடைகளையும் தாண்டி அழகான ஒரு பளிங்கு மண்டபத்தின் வாசலில் அமர்ந்தனர்.

நிலவின் மற்றொரு உருவம் அந்தப் பளிங்குத் தரையிலே தெரிந்தது. மங்கை அதைச் சுட்டிக் காட்டினாள். அவளுடைய காதலனோ அதை ரசிக்கவில்லை. "இந்த முழுமதிக்கு அவை ஈடல்ல" என்றான் மங்கையின் அழகிய கன்னங்களை வருடிக் கொண்டே.

அவள் பளிங்குத் தரையில் படுத்தாள். அவன் கைகளைப்பற்றினாள். அதன் பிறகு என்ன நடந்தது என்பதே யாருக்கும் தெரியாது. கண் விழித்துப் பார்த்திருந்த சந்திரனையும் மரங்கள் மறைத்துக் கொண்டன.

மறுநாட் காலை! மங்கை மட்டும் தனியாகச்சாந்திமத் தீவிற்குப் புறப்பட்டாள். காதலன் கரையில் நின்று வழியனுப்பினான். சமயம் நேரும் போது அன்னையிடம் சொல்லி, அவளை அழைத்துச் செல்வதாகக் கூறிச் சென்றாள்.

முதல் நாள் இரவு மங்கையையும் காணாமல், தூக்கமும் வராமல், கவலைத் தீயில் கருகிக் கொண்டிருந்தாள் கமலினி. அதனால் விடியும் பொழுது நன்றாகத் தூங்கிவிட்டாள். மங்கை வந்த சமயம் தான், கமலினியும் விழித்தெழுந்தாள். மங்கையின் கண்கள் சிவந்திருந்தன. தலைமயிர் கலைந்திருந்தது. சோர்வுடன் காணப்பட்டாள். இந்த நிலையில் மங்கையைப் பார்த்ததும் கமலினிக்குச் சந்தேகம் தோன்றியது. எழுந்து உட்கார்ந்தாள்.

"அக்கா! இன்னும் நான் இந்த உலகில் வாழ வேண்டுமா?" என்று கேட்டாள் கமலினி.

"அவசரப்படாதே கமலினி! அன்னையிடம் எல்லா விபரமும் தெரிவித்த பிறகு. உன் நோக்கம் போல் நடந்து கொள்ளலாம்" என்றாள் மங்கை.

'அக்கா! அன்னையிடம் தெரிவிப்பது இருக்கட்டும். ஆனால் அவரிடம் என்னை அழைத்துச் செல்! உன்னிடம் கெஞ்சிக்கேட்கிறேன். என்னை அழைத்துச் செல்!" என்றாள் கமலினி கண்ணீர் பெருக!

மங்கைக்கு அவள் போக்கு ஆச்சரியமாக இருந்தது. "அவன் கோமளத்தீவில் சிறை வைக்கப்பட்டிருக்கிறானே?" என்றாள். 'தெரியும் அக்கா! அதனால்தான் அவனைச் சந்திக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். நீ என்னிடம் எதையும் மறைக்க முயற்சிக்கலாம். ஆனால் உங்கள் அனைவரின் பாராட்டுதலையும் பெற்ற, வேவுக்காரியான நான், எதையும் சரியாக அறிந்து கொள்வேன். நேற்று இரவு முழுவதையும் நீ வீணாகக் கழிக்கவில்லை என்பதை உன் தோற்றம் அறிவிக்கிறது. அனுபவம் உள்ள நான் அதை உணர்கிறேன். ஆனால் அந்த இரவை, உன் காதலனிடம் தான் நீ கழித்திருக்க முடியும். இப்போதாவது என்னை அழைத்துச் செல்வதாக வாக்குறுதிகொடு" என்றாள் கமலினி.

"நீ அங்கு வந்து என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டாள் மங்கை!

"உன் முன்பாகவே அவரிடம் ஒரு வார்த்தை பேசவேண்டும். அவ்வளவுதான்" என்றாள் கமலினி. மங்கையும் சம்மதித்தாள்.

அன்று இரவு முன்நேரத்தில், மங்கையும் கமலினியும் படகிலேறி, கோமளத்தீவை நெருங்கிக் கொண்டிருந்தனர். மங்கையின் காதலன் கரையில் காத்து நின்றிருந்தான். ஆனால் படகில் இரு உருவங்கள் தெரிந்ததும் அவன் உள்ளத்திலே புயல் எழும்பியது. யாராயிருக்கலாம் என்று சிந்தித்தும், தெரியாதவனாய் திகைத்து நிற்கையில் படகும் கரையை நெருங்கியது. கமலினியைக் கண்டதும் அவன் மனதிலே புயல் வீசியது.

"வணக்கம்" என்றாள் கமலினி.

மௌனமாக பதில் வணக்கம் செய்தான் மங்கையின் காதலன். ஆனால் யாரும் எதுவும் பேசாமல் சோலையை அடைந்தனர். நேற்று தங்கியிருந்த அதே மண்டபம். அதை நெருங்கியதும் மங்கையின் உள்ளத்தில் இன்பகீதம் எழுந்தது. ஆனால் கமலினியின் உள்ளத்திலோ துயர கீதம் எழுந்தது.

"உங்களால் இந்த உத்தமி, நாட்டில் வாழ ஆசையின்றி, தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து விட்டாள்" என்று திடரென்று பேசினாள் மங்கை. அதற்கும் பதில் பேசாமல் அமர்ந்திருந்தான் அவள் காதலன்.

"அன்னையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலே எனக்கு இல்லை. அவர்கள் முகத்தில் விழிக்கவே மாட்டேன். நான் சாகத்தான் வேண்டும். ஆனால், என் மனதில் நீண்ட நாட்களாக ஒரு ஆசை புறையோடிப் போயிருக்கிறது. அதை மட்டும் நீங்கள் நிறைவேற்றி விடுங்கள்" என்றாள் கமலினி.

என்ன! என்று கேட்பது போல் நிமிர்ந்து பார்த்தான் அவன். "நான் இறப்பதற்கு முன்னால் உங்களுடைய மனைவியாக இறக்கவேண்டும். அதுவே என் ஆசை!" என்றாள் கமலினி!

"பைத்தியம் போல் பேசாதே கமலினி! முதலில் நீ அன்னையைப் பார்க்க வேண்டும், அதன் பிறகுதான் மற்ற விஷயங்களை முடிவு செய்யவேண்டும்!" என்றாள் மங்கை!

"இல்லை அக்கா! என்னைத் தடுக்காதே! என் இஷ்டம் போல் என்னை விட்டு விடு. ஆனால் முதன் முதலில் என்னை தன் இன்பத்திற்குப் பலியாக்கியவர் இவர் தான். அதுவரை பத்திரமாகப் பாதுகாத்து வந்த கற்பு, அன்று இவரால் தான் பறி போயிற்று. ஆகையால் நான் அவர் மனைவி, அவர் என் கணவர். இதை அவர் ஒப்புக் கொள்ளவேண்டும். அதன் பிறகு தான் நிம்மதியாக நான் உயிர் விட முடியும். எங்கே! என்னை ஒரு முறை "கண்ணே! கமலினி" என்று கூப்பிடுங்கள்" என்றாள் கமலினி.

"கமலினி! அவர் என் காதலர் இது தெரிந்தும் அவரை உன் கணவராக ஏற்றுக் கொள்ளப் போகிறாயா?"

"அக்கா! என்று என் கற்பு முதன் முதலாகச் சூறையாடப்பட்டதோ, அன்றே இந்த உலகத்தில் நான் வாழ வேண்டிய நாளும் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்து விட்டேன். ஆயினும் அன்னையின் கட்டளையை [illegible]

வேற்ற, பிறந்த பொன்னாட்டின் நலனுக்காக, என் மானத்தை யும் இழந்து, கொள்கைக்காக வாழ்ந்தேன். என் கடமை முடிந் தது. இனி நான் சாக வேண்டும். அதற்கு முதலில் என் கணவரிடம், விடை பெற வேண்டும். அதுதான் என் ஆசை ! இதற்குக் கூட அனு மதிக்கமாட்டாயா ? ''

மங்கை தன் காதலனைப் பார்த் தாள். அவன் கண்கள் கண்ணீ ரைப் பெருக்கிக் கொண்டிருந்தன. ஆத்திரத்திலும், அவசரத்திலும் அநியாயமாக ஒருத்தியின் வாழ்க் கையைக் கெடுத்து விட்டான். தாய் நாட்டிற்குத் தன் கடமையை செய்து வந்த மங்கை நல்லாளின் மானத் தைப் போக்கி விட்டான். இன்று அவள் கண்ணீர் விடுவதும் கணவ னென்று ஏற்றுக் கொள்வதும், சாகத் துணிவதும் அதனுல்தானே. இதை நினைக்கும்போது அவன் உள்ளம் வெடித்து விடும்போலிருந் தது.

'' நீங்கள் என் கண்ணீர் சிந்த வேண்டும். அதற்காகப் பிறந்தவள் நான்தான் ! வருகிறேன் !'' என்று மங்கையின் காதலனிடம் கமலினி சொன்னாள். அப்பொழுதுகூட மௌனமாகத் தலைகுனிந்து அமர்ந்திருந்தான் அந்த வீரன். மங்கை அவன் அருகில் அமர்ந் தாள். அவன் கண்ணீரை தன் புடவைத் தலைப்பினால் துடைத் தாள். '' நீங்களும் என் கண்ணீர் விட வேண்டும் ? அறியாமற் செய்த பிழைய், தவறாகக் கருதமுடி யாது. வேண்டாம் வீண் சஞ்சலம் '' என்று அவனுக்கு ஆறுதல் மொழிகள் கூறிக்கொண்டிருந் தாள்.

மங்கையின் தேறுதல் அவனுக் குச் சிறிது ஆறுதலாக இருந்தது. நிமிர்ந்து பார்த்தான். கமலினி யைக் காணவில்லை. மங்கையும் பார்த்தாள். கமலினி அங்கே காணப்படவில்லை. தூரத்தில் கடற் கரையை நோக்கி கமலினி சென்று கொண்டிருப்பதைப் பார்த்தனர்; திகைத்தனர்.

'' கமலினி ! கமலினி!'' என்று கத்தினாள் மங்கை ! ஆனால், கமலினி திரும்பிக்கூடப் பார்க்க வில்லை. ஆர்ப்பரிக்கும் அலைகள் அவள்மீது மோத, கடலுக்குள் இறங்கிவிட்டாள் கமலினி !

தொடரும்

முகவரி மாற்றம்

முக்கிய அலுவல்கள் காரண மாக சில நாட்களுக்குஎன் சொந்த ஊரில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டமையால் இது க்றாம் 'முரசொலி' இதழில் நான் ஏற்றிருந்த துணை ஆசிரி யர் பதவியை ராஜிநாமாசெய்து விட்டேன் என்பதைத் தெரிவித் துக்கொள்ளுகிறேன. இனிமேற் கொண்டு எனக்குக்கடிதம் எழு தும் தோழர்கள், தென்னரசு, திருக்கோஷ்டியூர், இராமநாத புரம் மாவட்டம்; என்ற முக வரிக்கு எழுத வேண்டுகிறேன்.

அன்பன்,
எஸ். எஸ். தென்னரசு

இதுவும் சரிதான் !

தென்றல் ஆசிரியர் !

வணக்கம். 5-3-'55 தென்றலில் '' கடைக்குணப் பேராசிரியரின் கடி தம்'' என்ற தலைப்பிட்டு பேராசிரி யர், வி. எஸ். சுப்பிரமணியனர் எழுதிய ' அந்த ' கடிதத்தையும் தங்கள் விளக்கத்தையும் கண்டு மனம் நொந்தோம்.

அரும்புமீசை அண்ணனுக்குக் கோபம் மீறிட்டால் '' தம்பிகளுக்கு'' அதில் கவலையுண்டு. ஆனால், மீசை யில்லா வயோதிகரின் கோபம் கண்டால் பொதுவாக மக்கள் பரிதாபப்படுவர் என்று அறிஞர் அண்ணு '' சேலம் இராமாயணப் போட்டியில்'' குறிப்பிட்டிருப்பதைத் தாங்கள் அறியாதவரல்ல !

பொதுவாக ''தென்றல்'' தமிழ்ப் பேராசிரியர்களும், தமிழ் மாணவர் களும் விரும்பிப் படிக்கும் ஒரு இலக்கிய ஏடு. அதில் புயல் வீசுவ தால் ஏற்படும் தீமை எங்களையே சாரும். நீங்கள் தென்றலின் ஆசிரியராக இருக்கலாம். ஆனால், ''தென்றல்'' ஒரு ''மக்கள் இதழ்'' என்பதை தயவு செய்து மறந்து விடாதீர். தென்றலில் எங்கள் சிற்றறிவிற்கு புரியும் குறைகளை நாங்கள் எடுத்துக்கூற எங்களுக்கு உரிமையுண்டு, '' தம்பிகள்'' என்ற முறையில். ''தென்றலுக்கு'' வரும் துயர்களையும் தாங்கிக்கொள்ளும் வீரமுண்டு. ''எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள்'' பாசறை யினராதலால்.

எதையும் உங்களிடமே நாங்கள் கேட்கலாம். அவரிடம் கேட்பதற் குரிய பக்குவம் எங்களுக்கில்லை. தங்கள் ஜனநாயகப் பண்பைக் கண்டு மகிழ்ந்தோம். உடனே வருந்தினேம். ''இன்னு செய் தாரை'' என்ற குறள் எங்கள் நினைவிற்கு வந்ததால் !

எனவே, அவருடைய சிலப்பதி கார ஆராய்ச்சிக்கும், தாலிப் பிரச் சினைக்கும் தங்களின் தென்றல் நடையில் பதில் எழுதுவதுதான் தாங்கள் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், எங்களுக்கும் செய் யும் தொண்டாகும். ''பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்காகப் பரி தாபப்படுகிறேன்'' என்ற வரிகண்டு வருந்தினேம். நாங்கள் பரிதாபத் திற்குரியவர்கள்தான். எங்கள்மீது எதற்காகப் பரிதாபப்படுகிறீரோ அறியோம். நாங்கள் '' அண்ணங் கள் '' என்பதை நாடறியும், நீங் களும் அறிவீர்கள். வாதிடுவதாக எண்ணி நீவிர் இருவருமினத்தின் அடிப்படையில் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வது தகவுடையோர் பண்பன்று.

எங்கள் பேராசிரியரின் கடிதத் திலும் காரம் இருப்பதைக் கண்டு மிக மிக வருந்துகிறோம். அதற்காக '' அவரை நீங்கள் யாராவது கல்லால் அடிக்கப்போகிறீர்கள்'' என்று எழுதுவது தங்கள் போன்ற வர்களின் தகுதியன்று.

''உலகத்தில் முதலில் பைத் தியக்காரன்தான் மற்றவனைப் பைத்தியக்காரனுக எண்ணி கல் வீசுகிறான்'' என்று மறைந்த இட்லர் அறியது தங்கள் நினைவிற் கும் வரும் என நினைக்கிறோம்.

மீண்டும் தங்களின் ''தம்பிகள்'' என்ற முறையில் இருகரங்களும் கூப்பி வணங்குகிறோம்.

வாழ்க தென்றல் பல்லாண்டு !

இங்ஙனம்,
இரா. செங்கல்வராயன்
முதலிடை நிலைச் சிறப்புத் தமிழ் மாணவர்கள் சார்பாக
சென்னை, 8-3-55

◉

இதுவும் நியாந்தான் !

தென்றல் ஆசிரியர் அவர்களுக்கு!

வணக்கம் . தங்கள் ' தென்றல் ' இவ்வார இதழில் திருச்சி அன்பர் ஒருவர் ஆண் நர்சுகள் வகுப்பையே ஒரேயடியாகத் தாக்கி எழுதியிருப் பது குறித்து வருந்துகிறேன்.

எங்களது கடமையை ஆற்றும் பொருட்டு நாங்கள் சக-பெண் நர்சுகளுடன் சிரித்துப் பேசிப் பழக நேரிடுகிறது. இது கண்டு சிலர் பொறுமை யுறுகின்றனர். ஆணும் பெண்ணும் கலந்து பேசிவிட்டால் அங்கு காதல் முளைத்துவிட்டதாக வோ, அந்த ஆஸ்பத்திரி காதல் கூடமாக மாறினதாகவோ ஆகி விடாது என்பதை அந்த அன்பர் உணரவேண்டும். நாங்கள் எவ் வளவு கட்டுப்பாடுகள், சட்டதிட்டங் களுக்குட்பட்டு எங்களது பணியை ஆற்றவேண்டியிருக்கிறது என் பதை அநேகர் அறியார். அனுவசிய மாக நாங்கள் பெண்களுடன் பேசி னலே அது குற்றமாகக் கருதப் படும். எங்கள் மேலதிகாரிகள் அதற்கே கண்டிப்பர். நர்சுகளும் அவர்களை எங்களது சகோதரி களாக எண்ணிப் பழகுகிறோம். கண்ட பெண்களுடன் எல்லாம் காமலீலையாட நாங்கள் காமாந்த காரர்கள் அன்று. பெண்களுடன் அவசியமாகப் பேசுவதற்குக்கூட சில சமயங்களில் எங்களுக்கு நேரம் கிடைக்காது.

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் சட்டப்படி 40 நோயாளிகள் இருக்க வேண்டிய வார்டுகளில் 100 நோயாளிகள் உள்ளனர். அங்கு 4 அல்லது 5 நர்சுகளே இருப்பர் (சுகாதார விதி முறைப்படி 8 படுக் கைகளுக்கு 1 நர்சு இருக்கவேண் டும்.) அந்த நோயாளிகளுக்கு மருந்துகள், ஆகாரம் முதலியன கொடுத்து கவனிக்கவே நேரம் போதாது. இதில் காதலுக்கு எங்கே நேரம் ?

தவிர இந்த நோயாளிகளில் ஆபரேஷன் செய்தவர்களும் Emergency ஆக வந்தவர்களும் சிலர் இருப்பர். அவர்களை அரை மணிக்கொருதரம், கால் மணிக்கு ஒருதரம் கவனிக்கவேண் டும். மணிக்கணக்கு தவறாது மருந்து, ஊசிகள், ஆகாரம் கொடுக்கவேண்டும். இதுபோன்ற சுறு சுறுப்பான சூழ்நிலையில் நாங்கள் ஓடியாட வேண்டியிருக் கும்பொழுது, நல்ல நிலைமையில் உள்ள சில நோயாளிகளது அவ சியமான அல்லது அவசியமில்லாத தேவைகளை புறக்கணிக்கவோ காலந் தாழ்த்திச் செய்யவோ நேரிடுகிறது. அதை அவர்கள் தவருக நினைத்து எங்கள்மேல் அதிருப்தியுற்று சினம் கொண்டு, ஊர் முழுவதும் அதைப் பறை சாற்றி நாங்கள் கவனிக்கவில்லை என்று கூறினுல் எப்படி? எங்களது கஷ்டங்களையும் நிலைமையையும் கவனித்துப் பேசவேண்டுமல்லவா!

One Cannot serve too many masters என்பதுபோல் நாங்கள் டாக்டர்கள், R. M. O; A. D. M. O; D. M. O, விஸ்டர்கள், மேட்ரன்கள் விசிட்டர்கள், நோயாளிகள் எல் லோருக்கும் ஏககாலத்தில் பதில் சொல்லி எவ்வாறு திருப்திப் படுத்த முடியும் ? இதுபோன்று தொந்தரவுகள் ஏராளம்.

எங்களுக்கும் மனச்சாட்சி என்று ஒன்றிருக்கிறது. நாங்கள் பெறும் ஊதியம் எங்களுக்கு உடமையாக நினைக்குமளவுக்காவது நாங்கள் உழைக்கத்தானே வேண்டும் ?

குஷ்ட, க்ஷயரோக நோயாளி களோடும் துர்நாற்றமுள்ள புண் களோடும், பலவித மனப்போக்குப் படைத்த விசித்திரமான நோயாளி களோடும் கட்டிப்புரண்டு கொண்டு, எங்கள் தேக நலனையே பணயம் வைத்துப் பணியாற்றும் நாங்கள் எங்களால் இயன்ற வரையில் எங்கள் கடமைகளை ஆற்றுகிறோம். ஆனால், எங்களில் சிலர் தங் களது இயற்கையான பழக்கத் தினாலும் முன்கோபத்தினாலும் காரமாகப் பேசலாம், பழகலாம், முறை தவறி நடக்கலாம். அதற் காக அவற்றைக் குறிப்பிட்டு திருத்த முற்படுவதை விட்டு ஒரு இனத்தையே வெறுப்பது அறி வுடைமையன்று. எல்லா விரல் களும் ஒரே மாதிரியாகவா உள்ளன.

எங்களது குரலும் பொதுமக் களின் செவியில் விழச் செய்வீர் களா !

தங்கள் அன்புள்ள
ஆர். வி. நாதன்
(ஆண்நர்ஸ்)
சி. எம். சி. ஆஸ்பத்திரி
வேலூர் 5-3-55

அடுத்த இதழில்

'' இந்நாட்டு மன்னர் ரிக்ஷா இழுக்கிறார் ''

ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி

அடுத்த இதழிலிருந்து 'கேள் விப்பெட்டி' பகுதியில், என் ஆசிரியர் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் பதிலளிப்பார்கள். நண்பர்கள், கேள்விப்பெட்டி என்றே முகவரி எழுதினல் போதும்.

◉

2—4—55 இதழில்; பன் மொழிப்புலவர் அப்பாத்துரை யார் அவர்கள்,

' சிலப்பதிகார ஆராய்ச்சி '

தொடங்குவார்கள் ! ' சிலம்பு நெறி ' அதில் ஆராயப்படும்.

[ஆ—ர்]

சந்தாதார் ஆகிவிடுங்கள்

' தென்றல் '

சென்னை-6.

இராமன் வணங்கத்தக்கவனா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அந்த அச்சத்தால், நான்தந்தையை மீறி பட்டாபிஷேகம்செய்து கொள்ளவில்லையென்று கூறுகிறான். இந்த அயோக்கிய இராமனை, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் புல்லனை, நேர்மையற்றவனை, அவதார புருடனாக இந் நாட்டு மக்கள் வணங்கலாமா? சாதாரண குடிமகனிடம் காணக் கூடாத பண்புகள் அத்தனையும் இந்த இராமனிடம் காணப்படுகின்றதே!

இன்னும் பாருங்கள். இப்படியெல்லாம் புலம்பிய இராமன் எவ்வாறு காட்சியளித்தான் என்பதை வால்மீகி பின்வருமாறு கூறுகின்றார்.

சுலோகம் 27.

ஸ்ரீராமர் ஜனங்களொருவரும் இல்லாத இடத்தில், இரவில் கண்ணீர் நிரம்பிய முகமண்டலமுடையவராய் மேற்கண்ட வண்ணமாயும் இன்னும் பலவாறாகவும், மிக்க விசனகரமான வார்த்தைகளை வெளிப்படையாய் சொல்லிவிட்டு ஒன்றும் பேசாதிருந்தார்.

இதை,மேலும் சுமந்திரன் வாயிலாகவும் வால்மீகி ஊர்ஜிதம் செய்கின்றார். தசரதனிடம் திரும்பிய சுமந்திரன்இராமரைக்காட்டில்எந்த நிலையில் விட்டுவந்தான் என்பதை விவரிக்கின்றான்.

சருக்கம் 58. சுலோகம்36. அயோத்தியாகாண்டம்.

இலட்சுமணரால் சுச்ருஷை செய்யப்படும் ஸ்ரீராமர்அஞ்சலிஅஸ்தராய் அங்கிருந்தபடியே **கண்ணீர் நிறைந்த திருமுக மண்டலமுடையவராக** நின்றுவிட்டார். **பரிதபிக்கத்தக்க** சீதாபிராட்டியார் அவ்வண்ணமே அழுதுகொண்டே மன்னர். திருத்தேரையும் என்னையும் பார்த்த வண்ணமேயிருந்தனர்.

கேவலம், மண்ணாசையில் பீடிக்கப்பட்ட இராமன் சிங்காதனத்தை இழந்த உடனேயே பேதைபோல, பொல பொலவென்னக் கண்ணீர் வடிக்கின்றான். மகாவிஷ்ணுவே அழும் பொழுது, மகாலட்சுமியான சீதா பிராட்டியார் அழாமல் இருக்கலாமா! அம்மையாரும் தனது பங்கிற்கு அழுது தீர்த்திருக்கின்றார்கள். இங்ஙனம் மனதை அடக்கி ஆளமுடியாத இருவரும், இன்னல் வந்துற்றபோதெல்லாம் கண்ணீர் பெருக்கி, புலம்பியழுத காட்சிகள் இராமாயணம் முழுவதிலுமே நிறைந்திருக்கின்றன. அவைகளை தனியாக்க் கவனிப்போம்.

இனி, நேர்மையுள்ளம் படைத்த பரதன், இராமனைத் தேடி, காட்டிற்கு வந்து தான் குற்றமற்றவன் என்பதை உணர்த்தி, அரசை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றான். உலகத்தார் தன்னை தந்தை சொல் தட்டிய தனயன் என பழித்துரைப்பார்களே என்ற அச்சத்தால் இராமன் மறுத்துரைக்க, பின்னர் பரதன் பாதுகைகளைப் பெற்று, அவற்றை அரசுமணிக்கட்டிலில் இருத்தி, யோகியைப்போல முற்றுந்துறந்தவனாய் இராமன் வரவை எதிர்நோக்கி 14 ஆண்டுகளையும் கழிக்கின்றான்.

இந்த உத்தமனும் பரதன், அரச போகத்தில் தனது பற்றின்மையை உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல புலப்படுத்தியும், வஞ்சகனும் இராமன் குருடனிடம் காட்டிய விளக்கொளியைப்போல, பரதனின் மேன்மையை உணராது அவனிடம் ஐயமும், பயமும் கொள்கின்றான். இராவணனை வென்று சீதையோடு அயோத்தி திரும்பவிருக்கின்ற இராமன், அனுமனை அழைத்து பரதனை வேவு பார்த்து வரும்படி அனுப்புகின்றான்.

யுத்தகாண்டம் சருக்கம் 18. சுலோகம். 9.

"ஸ்ரீராமர் சத்ருவர்க்கங்களை வென்றும், ஒப்பற்ற புகழை அடைந்தும், மனோரதம் நிறைவேறப் பெற்றவராய் **மகா பலசாலிகளான நண்பர்களுடன் கூடவருகின்றார்** என்ற இதைக்கேட்டு, அப்பொழுது **பரதன் எந்த முகக்குறியை கொள்கின்றானோ அதுவும், உன்னால் கவனிக்கத்தக்கது.** என்னைப் பற்றி எதுவோ அது எல்லாமும் கவனிக்கத் தக்கது.

சுலோகம் 10

பரதனது செய்திகள் யாவும் அறியத்தக்கன. முகவொளியாலும், **பார்வையாலும், பேச்சாலும் உள்ள கருத்துக்கள் உள்ளபடி அங்ஙனமே அறியத்தக்கன.**

சுலோகம் 11.

எல்லா மனோரதங்களையும் பூர்த்தி செய்து வைப்பதும், யானைகளும் குதிரைகளும்,ரதங்களும் நிறைந்ததும், தகப்பன், பாட்டன் முறையாய் வந்ததுமான இராஜ்யமானது **எவனது மனதைத்தான் மாறுபடச்செய்யாது.**

ப. நெடுமாறன்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை, செய்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றிற்கு இணங்க சகோதரத் துரோகியான இந்த இராமன் பேசுவதைக்கவனித்தீர்களா? எவ்வளவு இழிந்த மனப்பான்மை. உத்தமனும் பரதன் தனது உள்ளத்தைப் பன்முறை உலகறியத் திறந்துகாட்டி தனது பேரன்பை வெளிப் படுத்திய பின்பும், நாடாசைகொண்ட இராமனது உள்ளத்தில் பரதன்மேல் ஏற்பட்ட ஐயம் இறுதிவரை விலகவே இல்லை. எனவேதான் பலம் பொருந்திய நண்பர்களைப்பெற்றவனாய் தான் வருவதை முதலில் அறிவிக்கும்படி கூறுகின்றான். இதைக் கேட்டதும் பரதன் பயந்துபோய் விடுவான். நாமும் அவனைமிரட்டி அரசைக் கைக் கொள்ளலாம் என்று, இந்த சிறுமதிபடைத்த சீதைமணாளன் எண்ணுகின்றான். சொந்த சகோதரனது மனதை, உளவறிந்து வரும்படி அனுமனை அனுப்புகின்றான். எவ்வளவு நீசத்தனமான புத்தி. பரதனின் பெருமையையும் இராமனது சிறுமையையும் எண்ணும் பொழுது இந்த அற்ப இராமன் இந்த நாட்டில் கடவுளாகக் கொள்ளப் படுவதை எண்ணும்தோறும் பரிதாப உணர்ச்சி நமக்கு ஏற்படுகின்றது.

தம்பி நாடாள ஆசைப்படுகின்றான் என்பதை அறிந்த உடன், மணிமுடி துறந்து, கானகம் சென்ற குமணன் வாழ்ந்த இந்தத் திருநாட்டில், இராமனுக்கு இடமா என்பதை செந்தமிழ் படித்தோர், இத்திருவிடத்தில் வாழுவோர் எண்ணிப் பார்க்கட்டும்.

2

களத்தில் கண்ணீர் பெருக்கும் கோழை!

பேரிடி போன்ற துன்பங்கள் அடுக்கடுக்காக வந்துற்றபோதில் மனங் கலங்காது காரியமாற்றும் கடமை வீரனே மனிதருள் உயர்ந்தவன் என்று அறிவுடையோரால் கொள்ளப்படுவான். ஆனால் அவதார புருஷன் எனப் போற்றிப் புகழப்படும் இராமன் இன்னல் வந்துற்றபோதெல்லாம் பொறுக்கமாட்டாதவனாகப் புலம்பித் தீர்த்திருக்கின்றான். வாளும் வேலும் சீறிப்பாயும் களத்திலே எதிரியின் முன்னிலையிலேயே கண்ணீர் பெருக்குவதும், கலங்கிப் புலம்புவதும், மயக்கமுற்று சாய்வதும் ஆன கோழைகளுக்கே உரிய செயல்களை இராமன் கொண்டிருக்கின்றான். இப்படி அவன் களத்திலே கண்ணீர் பெருக்கியசம்பவங்கள் ஒன்றா! இரண்டா! ஏராளம்! ஏராளம்!

தண்டகாரண்யத்தில் இலக்குவனுடன் பிரவேசித்த இராமன் முன்னர், விராடன் தோன்றி சீதையை இராமனது கண்ணெதிரே தூக்கிக் கொண்டு செல்லுகின்றான். அதைக் கண்டு இராமன் அழுதுபுலம்புகின்றான்.

ஆரண்ய காண்டம் சருக்கம் 2 சுலோகம் 12.

லட்சுமணா, ஜனகரது திருமகளும், பதிவிரதையும், மிகசுகமாய் வளர்ந்தவளும் ராஜபுத்திரியும், புகழ்பெற்றவளும் **எனது மனைவியுமான இவளை** விராடனது இடுப்பில் நடுங்கி துடிப்பவளாகப் பார்.

சுலோகம் 13.

லட்சுமணா! கைகேயினுடைய, நமது விஷயத்தில் உத்தேசம் எதுவோ, வரத்தாலடையப் பட்ட மனோரதம், எதுவோ, அதெல்லாமும், சீக்கிரத்திலேயே நடந்தேறி விட்டது.

சுலோகம் 15.

லட்சுமணா வைதேகியை **பிறன் தொடுவதைக் காட்டிலும்** அதிக துக்கமானது பிதாவை இழந்ததிலும், அவ்வண்ணமே எனது இராஜ்யத்தை அபகரித்ததிலும் இல்லை.

சுலோகம் 16.

சோகத்தால் கண்ணீர் விட்டு துயருழன்ற இராமர் இங்ஙனம் மொழிகையில், லட்சுமணர் கட்டுண்ட சர்ப்பம்போல சினங் கொண்டவராய் பின்வருமாறு மொழிந்தார்.

மனைவியை மாற்றான் தூக்கிக் கொண்டு செல்லுகின்றான்; அதுவும் கணவனது கண்ணெதிரில். காகுத்தன் கையில் வரம் பெற்ற வில் இருக்கிறது, ஏழுமரா மரங்களை துளைத்து, அதல, சுதல, தராதல என்று ஏழு பாதாளங்களிலும் பாய்ந்து, ஏழு கடல்களையும் வற்ற அடித்து, திரும்பிய அம்புகள் இருக்கின்றன. இன்னும், அகத்தியரும் விசுவாமித்திரரும், பரத்வாசரும் அளித்த அஸ்திரங்கள் அளவு கடந்து இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, இராமனிடம், ஆக்கவும் அளிக்கவும் வல்லகடவுள் அம்சம் இருக்கிறது. இவ்வளவு இருந்தும் அந்த தசரதன் பெற்ற மைந்தன் கதறி அழுகின்றான். கண்ணீர் விடுகின்றான். கைகேயியைத் திட்டுகிறான். சீதையை விராடனது இடுப்பில் இருப்பவளாகப் பார்த்து கையை பிசைந்துகொண்டு கண்ணீர் விடுகின்றான். இராமனது கோழைத்தனத்தைக் கண்டு இலக்குவனுக்கு கோபம் வருகின்றது. அண்ணனைத் தேற்றி தைரியமூட்டுகின்றான்.

இங்குமட்டுமல்ல கண்ணீர் புராணம், மேலும் தொடர்கிறது. இராவணன்சீதையைத் தூக்கிச் சென்று விடுகின்றான். அதை அறிவதற்கு முன்பு, சீதையைத் தனியாக விட்டு விட்டு தன்னைத்தேடி இலக்குவன் வந்ததும் இராமனது பயந்தமனம் பதறுகின்றது. உடனே சீதையை எண்ணிப்புலம்ப ஆரம்பிக்கின்றான். இந்தப் புலம்பல் 58 வது சருக்கத்தில் ஆரம்பித்து அறுபதாவது சருக்கத்தில் உச்சநிலை அடைகின்றது. புத்தி பேதலிக்கிறது. "மானே, மயிலே, மரமே, மட்டையே, செடியே, கொடியே, குன்றே, குகையே, நதியே, நீரே என கண்ணில் தென்படுபவை எல்லாம் பார்த்து சீதையை கண்டீர்களா என்று பித்தம் தலைக்கேறப் பிதற்றுகின்றான். இங்ஙனம் இராமன் அழுது புலம்புவதைக் கூறும் சுலோகங்கள் எவ்வளவு தெரியுமா? திகைத்து விடாதீர்கள்.

ஆரண்ய காண்டத்தில் சருக்கம் 58ல் இருந்து 64 வரையிலும், கிஷ்கிந்தா காண்டத்தில் முதலாவது சருக்கத்திலும் சேர்த்து மொத்தம் முன்னூற்றுக்கும் அதிகமானசுலோகங்கள் இராமன் பிரலாபத்தை வர்ணிக்கின்றன. முழுவதையும் படித்தால் இராமன் எவ்வளவு கோழை, திடசித்தமில்லாதவன் என்பதை தெரிந்து கொள்வதோடு மட்டும் அல்லாது, அவன் எவ்வளவு காமாந்தகாரனாய் இருந்திருக்கின்றான் என்பதும் புரியும். சீதையின் அங்க அவையவங்களைஎடுத்துக்கூறி, அவற்றால் தான் பெற்ற இன்பம்

பரதனை உளவறிந்து வர

கலேயும் எண்ணி எண்ணி உருகுகின்ருன். இப்படிக் கோழைத்தனமாக கண்ணீர்பெருக்கியஇராமன்எப்படிக் காட்சியளித்தான் என்பதைப் பாருங்கள்.

சருக்கம் 59 சுலோகம் 2:

இராமர் சகுனங்களே, அசுபங்களே சூசிக்கின்றவைகளாகக் கவனித்து சீதைக்கு தீங்கு விளேயுமோ என்னவோ என்று சொல்லிக் கொண்டு **பன்முறை வாய் விட்டுக் கதறினர்**

சுலோகம் 8.

ஜாக்கிரதையாய் காட்டில் காதலியைத் தேடிக் கொண்டிருக்குமவர் கண்டாரில்லே. அதனல் **மன வேதனேயால் வெறிபிடித்தவர் போலவும் துயரால் சிவந்த கண்களே உடையவர் போலவும்** காணப்பட்டார்.

சருக்கம் 61. சுலோகம் 21,

அந்த ஸ்ரீ ராமர் சீதையைக் காணுமையால நொந்து **பரிதாபமாய் புலம்பிக் கொண்டு** சோகம் அதிகரித்தவராய் ஒரு முகூர்த்த காலம் இன்னது செய்கிறது என்று தெரியாதவராய் இருந்தார்.

சுலோகம் 22.

அவர் துவஷிபுற்ற எல்லா அவயவங்களேயும் உடையவராய் **உணர்ச்சியற்று, மனமுமுறிந்து பரிதாபமாய் கஷ்டப்படுகின்றவராய்** வெப்பமாகவும், தீர்க்கமாகவும், பெருமூச்சு விட்டுக் கொண்டு **ஏங்கிக்கிடந்தார்**

சருக்கம் 63. சுலோகம் 1.

சககரவர்த்தி திருமகனும் அவர் காதலியை விட்டுப் பிரிந்தவராய் சோகத்தாலும், துன்பப்படுத்தப்படுகின்றவராய் அதிவேதனேப்படுகின்றவராயும் தம்பியை இன்னும் அதிகமாகத் துன்பப் படுத்திக் கொண்டு பெருந்துன்பத்தை அடைந்தார்.

சுலோகம் 20.

மனுேதைர்யத்தைகைவிட்டிருந்த ராமர் துயைத்தில் மூழ்கியவராய் யாவரும் மெச்சத்தகுந்த மானிட செய்கையுற்றவரும், மேற்கண்டவாறு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் லஷ்மணருக்கு செவி கொடுக்கவில்லே. இன்னும் மகத்தான துன்பத்தை அடைந்தார்.

கிஷ்கிந்தா காண்டம், முதலாவது சருக்கம்முதலாவது சுலோகம்.

அந்த ராமர் ஸ்வபாவசக்தியில்லாதவராகிஅந்தத்தாமரைநெய்தல்,மீன் இவைகள் நிறைந்த சரஸை அடைந்து **கண்ணீர்பெருக்கினர்.**

இப்படி எல்லாம் அண்ணன் புலம்புவது கண்ட இலக்குவனுக்கு ஆத்திரமும் அவமானமும் பொங்குகின்றது.

சுலோகம் 115.

ஸ்ரீ ராம! ஜலப்பிரவாகத்தால் இருந்த இடம்தெரியாது இருக்கின்ற கின்னர பேடையைப்பற்றி ஓர் ஆண் கின்னரம் எப்படியோ அப்படி, மனுேதைர்யத்தை இழந்து ஜானகியாரைப்பற்றி இடைவிடாது பரிதபிக்கின்றீர்.

சுலோகம் 120.

அஞ்ஞானத்தால் மூடுண்ட ஏதோ ஒரு விவேகமற்றவன் போல தேவரீர் தவிககின்றீர்,

மலேயளவு மகத்தான துன்பம் வந்தபோதிலும் மனங்கலங்காதவனே மனிதன் ஆவான் என்பது அறிவுடையோர் கூற்று. சாதாரண மனிதனுக்கே இந்த விதி ...ன்ருல் கடவுள் என்று கூறப்படும் ...ன் எவ்வளவு கலங்காத ... படைத்திருக்க வேண்டும்.

ஆனல்? நாம் காண்பது என்ன, நம் கண்முன் தோற்ற மளிக்கும் இராமன், பேடியிலும் பேடியாய், பேதையிலும் பேதையாய் விளங்கிய கோழையிலும் கோழையை, வீரத்தின்திருவுருவமாக, போற்றலாமா? அதுவும், புறநானூற்று வீரம் புரண்டோடிய தண்டமிழ் நாட்டிலே, இந்தப் பேடியின் கதை படிக்கப்படலாமா?

இன்னும் இந்தக் கோழைகளின் கதையைப் பாருங்கள். விராடன் தாக்க வந்த நேரத்தில் தமையனை இராமன் மனங் கலங்கி தைரியமிழந்து கதறினன். அப்பொழுது தம்பியான இலக்குவன் பெரிய வீரனேப் போல தமையனேத் தேற்றினன். இப்பொழுது கபந்தன் என்பவன் சீதையை தேடித்திரியும் இவ்விருவரையும் கண்ட உடன் பிடித்துக் கொள்கின்றன.

கம் என போர்க்களத்தில் புலம்புகின்ருன். அதுவும் பகைவன் முன்னிலேயில். வந்த பகைவன் என்ன எண்ணி யிருப்பான். அடகோழைகளா! உங்களேக்கொல்ல வந்தேனே என்று சிரித்திருப்பான்.

இன்னும் இந்தச் சூரர்கள் இராவணனுடன் போர்புரிய படைகளுடன் இலங்கையை நோக்கிச் செல்லுகின்ருன். வழியில் கடல் குறுக்கிடுகின்றது. கடலேக் கண்டதும் இராமன் கலங்குகின்ருன். இதை எப்படித் தாண்டப் போகின்றேன். தாண்டி சீதையை எங்ஙனம் அடைவேன் என புலம்புகின்ருன்,

யுத்த காண்டம் சருக்கம் 1 சுலோகம் 16.

சீதையைத்தேடி கண்டு பிடிப்பது எப்படியும் நன்கு செய்து முடிக்கப் பட்டது. என்றாலும் சமுத்திரத்தை நினைத்து எனது மனமும் மீளவும்

அண்ணு! கோழைமாதிரி வீணு அழாதே!

உடனே இலக்குவன் அஞ்சி அலறுகின்ருன்.

கிஷ்கிந்தா காண்டம் சருக்கம் 63 சுலோகம் 27.

சூரரே, அரச்கனுக்கு அகப்பட்டு போய்விட்ட என்னே சாகத்துணிந்தவனய் திருவுள்ளத்தில் பற்றும். ஸ்ரீராம! என் ஒருவனேடு பிரிந்தவராகி தேவரீர் விடுவித்துக் கொள்ளும்.

சுலோகம் 28.

என்னே உயிர்பலியாக மனக்குறையில்லாமல் கொடுத்துவிட்டு தப்பித்துக்கொள்ளும்.

சுலோகம் 30.

காகுத்த! தகப்பன் பாட்டன் முறையே கிடைத்த உலகை அடைந்து, ஸ்ரீராம ராஜ்யத்தை அடைந்தவராகி எப்போதும் அடியேனே நினைக்க அருள் புரிய வேண்டும்.

கடைசிக்கும்பிடுகூட போட்டு விட்டான் வீரத்தம்பி! "அண்ணு என்னேவிட்டு விட்டு நீர் தப்பித்துக் கொள்ளும். என்னே மறந்து விடாதீர். இதோ எனது கடைசி வணக்

கலங்கி விட்டது.

சுலோகம் 19.

சத்ருக்களே வருத்துபவனும், மகாபாகுமான ஸ்ரீராமர் அனுமாரைப் பார்த்து மேற்கண்டவாறு **சொல்லிவிட்டு சோகத்தால் கலங்கியவராய் அப்பொழுது சிந்தையில் ஆழ்ந்து விட்டார்.**

பாருங்கள்! சீதையைத் தேடிக் கண்டு பிடிக்கத்தான் மாற்ருன்

உதவி தேவைப்பட்டது. இப்பொழுது கடலே கடக்கவும் சக்தியற்றவராய் பாற்கடலில் பள்ளிகொண்ட எம்பெருமான் திகைக்கின்ருர். சோகத்தால் கலங்குகின்ருர், கடவுள் அம்சம் பெற்றவன். உடனே சுக்ரீவன் இராமனேக் சடிந்துரைக்கின்ருன்.

சருக்கம் 2. சுலோகம். 2.

வீரரே, மற்றசாதாரண மானிடன் போலவே தேவரீர் வருந்துகின்றீர் என்று இவ்வாறு கூறிவிட்டு தனது சேனேயின் உதவியால் அணைகட்டித் தருவதாகக்கூறி இராமனே தைரியப் படுத்துகின்ருன்.

களம் காணுமுன்பே புலம்பும் இந்த இராமன் களத்தில் எப்படி எதிர் நிற்பான்? அங்கும் அப்படியே முறியடிக்கப்பட்டு அழுகின்ருர்கள். இராவணன் மைந்தனும் இந்திரசித்தின் பாணங்களால் அடிபட்டு வானரசேனே பின்வாங்கி ஓடுகின்றது. இராமனும், இலட்சுமணனும் அடிபட்டு எதிர்நிற்க முடியாமல் கீழே விழுகின்ருர்கள்.

யுத்த காண்டம் சருக்கம் 45 சுலோகம் 14.

மர்மம் தெரிந்த வீரனுன அவன் ஸ்ரீராம லட்சுமணர்களுடைய மர்மஸ்தானங்களில் கூரிய பாணங்களேப் பாய்ச்சியவனய் அதனுல் மென்மேலும் ஆரவாரித்தான்.

சுலோகம் 15.

அந்த இருவரும் போர்முனையில் கணைகளாகிய கட்டினுல் கட்டப்பட்டவர்களாகி ஒரு இமைப் பொழுதிலேயே கண்விழித்துப் பார்க்கவும் சக்தியற்றவர்களானுர்கள்.

சுலோகம் 16.

அப்பொழுது அந்த இருவரும் பாணக் கூர்முனைகளால் பீடிக்கப் பெற்றவர்களாய் **உடல்முழுவதும் காயப்படுத்தப் பட்டவர்களாய்,** கயிற்றினின்று அவிழ்த்துவிடப்பட்ட தேவேந்திரனது கொடிகள் போன்றவர்களாய் காணப்பட்டார்கள்.

சுலோகம் 17.

லோகநாதர்களும், சிறந்த வில்லாளிகளும், வீரர்களுமான அவ்விருவரும் உயர்நிலேயில் அடிபட்டதால் வாட்டமுற்று, **உடல் நடுக்கமுற்று தரையில் சாய்ந்தனர்.**

சுலோகம் 20.

முன்ெருரு காலத்தில் எவனுல் இந்திரன் வெல்லப்பட்டானே அந்த இந்திரசித்தால் சினங்கொண்ட அம்புகளால் அடிக்கப்பட்ட ஸ்ரீராமர் **தரையில் முதலில் சாய்ந்தார்.**

இவ்விதம் அடிபட்டு எதிர்நிற்கும் ஆற்றலற்று, தன்முன்னர் இரத்தம் பெருக்கியவர்களாக விழுந்துகிடக்கும் இராம இலட்சுமணர்களேக் கண்ட இந்திரசித்தன் அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நினைத்து, போரை நிறுத்திவிட்டு இலங்கை திரும்பினன். (தொடரும்)

வணங்காமுடி

புத்தம் புதிய கருத்தோவியங்களேத் தாங்கி வெளிவரும், மாதம் இருமுறைப் பத்திரிகை.

முதல் இதழ் 15-3-55 தேதி வெளிவரும்.

முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் எங்கும் தேவை.

விபரங்களுக்கு:

நிர்வாகி,

'வணங்காமுடி'

S. M. L. தெரு,

தேவகோட்டை.

தி. மு. க. கிளைகள் தேர்தல் பற்றிய அறிக்கை

தி. மு. கழகச் சட்ட திட்டங்கள் 97-வது பிரிவின்படி கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள சிற்றூர்ப் பேரூர்க்கிளை [சிறிய-பெரிய பஞ்சாயத்து (**Minor-Major Panchayat**) ஆட்சிப் பகுதி]—நகரக்கிளை [நகரமன்ற (**Municipality**) ஆட்சிப் பகுதி] உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற் குழுக்களையும் மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க 27-3-55 ஞாயிற்றுக் கிழமையைத் தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் அல்லது புதிதாகக் கிளை துவக்கியிருந்தாலும் அப்படிப்பட்ட கிளைக்கழகங்களும் 27-3-55 ஞாயிறன்று கூடி செயற்குழுவை உறுதி செய்து கொண்டு, மாவட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ உறுதிப்படுத்திக் கொள்ளவோ வேண்டும்.

கழக உறுப்பினர்களாய் இருந்துவருபவர்கள் தங்கள் உறுப்பினர் நிலையை இப்பொழுது புதுப்பித்துக் கொள்ளவேண்டியதில்லை. 28-2-55-ஆம் நாளுக்கு முன் உறுப்பினராகி இருப்பவர்கள் மட்டுமே இந்தத் தேர்தலில் வாக்காளர்களாக இருக்க உரிமையுடையவராவர். உறுப்பினர் சேர்ப்பது இரண்டு திங்கள்களுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. 1-3-55-ஆம் நாளுக்குமேல் புதிதாக உறுப்பினராகச் சேர்பவர்கள் இந்தத் தேர்தலில் கலந்து கொள்ளக் கூடாது. 1-3-55-க்குப் பிறகு அமைக்கப் பெறும் கிளைகள் இப்பொழுது பதிவு செய்து கொள்ளப்பட மாட்டா. புதிய பொதுக்குழு அமைந்ததற்குப் பிறகு தான் அவை கவனிக்கப்பெறும்.

கிளைக் கழகங்களெல்லாம் 27-3-55ல் தேர்தல் நடத்தித், தேர்தலின் முடிவுகளை தலைமைக்கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப் பெறும் **"கிளைக் கழகப் பதிவுச் சீட்டி"ல்** தெளிவாகக் குறித்து 31-3-55-ஆம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரின் முகவரிகளைத் தெளிவாக அந்தச் சீட்டில் எழுதி அனுப்பவேண்டும்.

தேர்தலின் முடிவு குறிக்கப்பட்ட கிளைக்கழகப் பதிவுச் சீட்டு, தலைமை நிலையம் வந்து சேர்ந்தால் தான், ஒவ்வொரு கிளைக்கழகமும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

27-3-55-ல் தேர்தல் நடத்தும் கிளைக்கழகம் மட்டுமே மாவட்டக்கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முன்பே தேர்தல் நடத்தியாகி விட்டது என்று இருத்தல் கூடாது.

27-3-55-ல் கிளைக் கழகத் தேர்தல் நடத்த வேண்டிய மாவட்டங்கள் :—

சென்னை	சேலம்	மதுரை
செங்கற்பட்டு	கோவை	இராமநாதபுரம்
தென் ஆற்காடு	தஞ்சை	திருநெல்வேலி
வட ஆற்காடு	திருச்சி	நாஞ்சில்

கோலா ஆந்திர கருநாடகப் பகுதிகள்.

தேர்தலில் கடைப் பிடிக்கவேண்டிய விதிகள்:—

1 ஒவ்வொரு சிற்றூரிலும் (சிறிய பஞ்சாயத்து ஊர்—**Minor-Panchayat**) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட சிற்றூர்க் கிளை ஒன்று தான் இருக்கவேண்டும்.

2. ஒவ்வொரு பேரூரிலும் (பெரிய பஞ்சாயத்து ஊர், 25க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பேரூர்க்கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு நகரிலும் (நகராட்சிப்பகுதி) 25க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட நகரக்கிளை ஒன்று தான் இருக்கவேண்டும்.

4. சென்னையில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் 25க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட வட்டக்கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

5. சிற்றூர்-பேரூர்-நகரம்-சென்னை வட்டம் ஆகிய கிளைகளின் தேர்தல்கள் நடைபெறும் போது, அந்தந்தக்கிளைகளின் செயலாளர்கள் குறிப்பிடும் ஓரிடத்தில் வந்து எல்லா உறுப்பினர்களும் கூடவேண்டும். [நகரங்களிலுள்ள வட்டாரங்கள் இப்பொழுது தேர்தல் நடத்தவேண்டியதில்லை. நகரக்கிளை தேர்தல்தான் இப்பொழுது நடைபெற வேண்டும். நகரிலுள்ள எல்லா உறுப்பினர்களும் நகரக்கிளைத் தேர்தலில் ஒரு படியாகக் கலந்து கொள்ளவேண்டும். நகரக்கிளை அமைந்த பிற்பாடு வசதியானபோது 25க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரமும் நகரக் கிளைச் செயலாளருக்கு அறிவித்து விட்டு, நகரக்கிளைச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின் கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக் கொண்டு இயங்கலாம்.]

6. ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

7. செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும், 21 பேருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

8. சிற்றூர்க்கிளை ஒரு பிரதிநிதியையும், பேரூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டக்கிளை இரண்டு பிரதிநிதிகளையும், நகரக்கிளை அந்தந்த நகரமக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கு ஒவ்வொரு பிரதிநிதி வீதமும் அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

9. தேர்தல் கிளைக்கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்படவேண்டும். முன்னைய செயலாளரே தேர்தலுக்கு நிற்பதாக இருந்தால், கூடியிருக்கும் பொது உறுப்பினர் கூட்டம், தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டக்கழகம் அனுப்பிவைக்கும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தான் வட்டக்கிளைத் தேர்தல் நடைபெறவேண்டும். பிற மாவட்டங்களில் அவசியப்பட்டால் குறிப்பிட்ட கிளைகளின் தேர்தல்களை நடத்திவைக்க, மாவட்டச் செயலாளர், தேர்தல் ஆணையாளர்களை அனுப்பிவைக்கலாம்.

10. தேர்தல் நடைபெறும்போது வாக்குரிமை பற்றிய தகராறுகள் கிளம்புமேயானால், கூடும் கழக உறுப்பினர்கள், அவற்றைக் கூட்டத் தலைவரின் தீர்ப்புக்கு விட முயலல் வேண்டும். அவசியமானால் கூடியுள்ள பெரும்பான்மையோரின் வாக்குகளால் முடிவெடுக்க முயலலாம்.

11. தேர்தல் நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன்பே, கிளைச்செயலாளர் கழக உறுப்பினர்கள் அனைவரும் அறியும் வகையில் தேர்தல் நடைபெறும் செய்தியையும், தேர்தல் நடைபெறும் இடத்தையும் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்டவேண்டும.

12. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால் மாவட்டக் கழகத்தின் மூலம், தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்து நீதி கோரலாம். தலைமைக் கழகம் பிறகு ஆய்ந்தறிந்து தீர்ப்புக் கூறும். தேர்தல் நாளன்று தகராறு கிளப்பக்கூடாது.

"அறிவகம்"
இராயபுரம் : : சென்னை-13.
5—3—55

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்.

தென்றல்
பேராசிரியர் மலர்!

" தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற்
றிருநாடும் "
" ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து
சிதையா உன் சீரிளமைத்திறம் வியந்து
செயன் மறந்து வாழ்த்துதுமே"

[தமிழ் மொழிக்கும் திராவிட இனத்துக்கும் புதிய உணர்வு தந்த வீரர்களில் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் (பிள்ளை) முதன்மையானவர். எழுபது ஆண்டுகளுக்கு முன்பே இன எண்ணம் ஊட்டியவர். அன்னார் 1855 ஏப்ரலில்பிறந்து, 1897 ஏப்ரலில் மறைந்தார். வருகிற ஏப்ரல், அவரது பிறப்பிலிருந்து நூறும் ஆண்டாக நிற்கிறது. அன்று தென்றல், ஒரு மலர் வெளியிட்டு அவரை கௌரவிக்கிறது.]

★ விலை ரூபாய் ஒன்று. விற்பனையாளர்கள் பிரதி ஒன்றுக்கு 12 அணா வீதம் முன் பணம் அனுப்பி, மார்ச் 20உ க்குள் வேண்டிய பிரதிகளுக்கு பதிவு செய்து கொள்ளவும். பிறகு குறைப்படுவதில் பயனில்லை.

★ தனி இதழ் கோருவோர் ஒரு ரூபா ஸ்டாம்பு அனுப்பவும்.

★ மலரில் பேராசிரியர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பலரும் எழுதுகிறார்கள்.

★ மலர் ஏப்ரல் 10உ யன்று எங்கும் கிடைக்கும்.

★ மலர் முழுச் சிறப்புடனும் திகழும.

தென்றல்
சென்னை-6.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 5

ஈற்றடி: 'கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்'

குறிப்பு ; நேரிசை வெண்பாக்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு தேதி 19-3-55

நீதிபதி 'சரி' தென்றல் : : சென்னை

வெண்பாப் போட்டி

வெண்பாப்போட்டி 3-க்கு, பிரசுரமாகவேண்டிய வெண்பாக்கள் அதிகம் இருந்தமையால் இவ்வாரத்திலும் அதையே தொடர்ந்து வெளியிட்டுள்ளோம். அடுத்த இதழில் (வெண்பா 4) ''பகுத்தறிவால் ஆராய்ந்து பார்'' இரு பக்கங்களில் வெளியாகும்.

3. கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

பேரெழிலே யானாலும் பாம்பதனைக் கொல்கின்றார்
போரெழிலும் பண்பாடும் பண்டைநற்--சீரெழிலும்
விண்டிகழ்ந்து நல்லறிவை வீழ்த்திடும்நூல் அத்தனையும்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—தேனித்தும்பி, திருவையாறு.

★

வில்லேந்திப் போரிட்ட வீரத் தமிழர்முன்
புல்லேந்தி வந்த புரிநூலார்--சொல்லுகின்ற
உண்மையிலா வேதம் உபநிடதம் அத்தனையுங்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—நரசிம்மன், சிருவாக்கூர்.

★

பலதிறத்தில் தீமை பயப்பனவாய்ப் பண்பின்
நிலவுலகத் தோரை நெருக்கும்--சிலநூல்கள்
உண்டென்று சொன்னால் உடனே அவைகளைநீ
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—தி. ந. அருச்சுனன், சென்னை 7.

★

கன்னித் தமிழ்மகளின் கன்னத்தில் மாசெனவே
பன்னூல் இயற்றினரே பண்பிலார்--தென்னகத்துப்
பண்டையநல் சீரைப் பழித்திடுமவ் வேடுகளைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—வ. சோதிவேல், ஆம்பூர்.

★

கேடோட்ட வல்லாரைக் கேலிமிக செய்வதுவோ
மாடோட்டி வந்த மறையவர்கள் ?--வீடோறும்
மண்டுவதோ அன்னவரின் மாமறைகள் ? இன்றுடனே
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—ஆதி. சானகிராமன், விழுப்புரம்.

★

முத்தமிழைத் தூற்றியும் மூடமதம் போற்றியும்
தித்திக்கும தேன்தமிழ்நூல் தியிலிட்டும்--உத்தமர்போல்
பண்பாடும் பார்ப்பனரின் பண்டுநால் வேதத்தைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—வெ. இறையழகன், ஆயக்குடி.

★

வளியென்பர் நீரென்பர் வானென்பர் ஈசன்
ஒளியென்பர் மண்ணென்பர் ; ஒன்று(ய்)--அறிவென்று
கண்டவரைக் காயும் கயவரது ஏடுகளைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—பேகா. பொருளரசு, பேரையூர்.

★

மூடப் பழக்க வழக்கங் களைவளர்க்கும்
ஏடெங் கிருந்தாலும் ஏந்திழையே !--தேடியதைக்
கண்டுபிடித்(து) ஒன்றுமே மிஞ்சாமற் கட்டியெல்லாங்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—இரெ. தங்கையா, திருமங்கலம்.

சாதிபல காட்டிச் சழக்கனைத்தும் நாட்டிநிறை
நீதியிலை என்று நிலைகுலைத்த--வேதியர்கள்
ஒண்டமிழ்நூல் என்றிடினும் ஊரறியச் சந்தியிலே
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—ம. சோமசுந்தரம், ஆம்பூர்.

★

மலம்பட்ட மாசகற்றி மாங்கனியுண் பாரோ
நலங்கெட்ட நோக்கமுடன் நிற்கும்--வலங்கெட்ட
ஒண்டனிரா மன்கதையும் ஒவ்வாப்பு ராணமெல்லாங்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—க. மதிவாணன், திருவையாறு.

★

வண்டமிழர் வாழ்வதனை வாட்டுதற்கே வந்தடைந்த
முண்டர்தம் வேதமொடு மூதறிவைத்--துண்டிக்க
பண்டெழுந்த காதை பலவற்றைத் தீயினிலே
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—சுப. கல்யாணசுந்தரம், தேவகோட்டை.

★

ஈன்றாள் பசியால் இறந்தாலும் எத்தமிழர்
சான்றோர் பழித்தவற்றைச் செய்யாரே !--நான்மறையில்
உண்டோ ? தமிழ்வீட்டில் ஒட்டடைஏன் ? தீமூட்டிக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—கே. எஸ். மாணிக்கம், சிவகங்கை.

★

பண்டைத் தமிழ்வீரம் பாங்கான நல்லறம்
தண்டமிழ் தேர்ந்த தமிழ்மகனே !--பண்டுமுதல்
அண்டி நமைக்கெடுக்கும் ஆக்கமிலாக் குப்பைகளைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—பி. ராஜகோபால், திருக்காட்டுப்பள்ளி.

★

கம்பன் பழம்பாட்டைக் கற்றோர் விழைவாரோ
வம்பு மலிந்த வசைச்சொல்லால்--நம்புகழை
அண்டியனல் சூழ்ந்து அழித்ததைவெஞ் சாக்காட்டில்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—கை. மு. ப. அண்ணாமலை, ஆம்பூர்.

★

நன்றல்லாப் புன்றலைப்பை நல்குதலால் நாணமிலார்
துன்றுகதை யேவிரவித் தோன்றுதலால்--வென்றிமிகக்
கொண்டதமிழ்ப் பண்புகலை கொன்றிடலால் தந்திதனைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—இளங்கோ, கோபிசெட்டிபாளையம்.

★

சாதிமத வேற்றுமைகள் சாற்றுகின்ற எவ்வேடும்
நீதி யளிக்குமென நீநினையேல்--ஓதிடுவேன்
பண்டைதமிழ் நூலென்று பண்டிதர்கள் போற்றிடினும்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—வித்துவான். சி. இரத்தினவேலனார், சென்னை.

★

கன்னித் தமிழ்தனைக் கானில் படரவிட்டுப்
புன்மொழியை நாட்டிட்டார் பூவுலகில்--மென்மொழியே !
தண்டமிழர் பால்மொழியைத் தாழ்வுசெயு மந்நூலைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து,

—டி. எஸ். நெடுவேள், மேலைச்சிவபுரி.

★

தீரமாய்த் தீய நினத்தந்தி யைக்கொளுத்தும்
சீரதுபோல் திண்மைத் திராவிடனே !--பாரதமும்
பண்டாரி யர்தான் பகர்ந்தரா மாயணமும்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—டி. என். என். கவிக்குஞ்சரப்பாவலர், வாளாடி.

★

ஆரியர்தம் வேதங்கள் ஆபாச சாத்திரங்கள்
காரியுமிழ் ராமகதை கற்பனைகள்--பாரினிலே
தண்டமிழர் பண்பாட்டைத் தாக்கிவரும் ஏடுகளைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து

—சமா. தமிழ்ச்செல்வன், தாசர்புரம்.

தென்றல் திரை

15-3-55 இதழில் !

பிரமிக்கத் தக்க படங்கள் !
சுவையான பல பகுதிகள் !
கருத்தையள்ளும் கட்டுரைகள் !

விலை அணா 4

ஆண்டு சந்தா ரூ. 3

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14.